விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 27 | வெள்ளிக்கிழமை | (12.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 329

### சமாதான முயற்சிகள் தொடர்பாக

# புதிதாக எந்தவொரு செய்தியையும் ஜனாதிபதி அனுப்பிவைக்கவில்லை

### செய்தியாளர் சந்திப்பில் அன்ரன் பாலசிங்கம்



(கிளிநொச்சி)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்றவகையில் ஜனாதிபதி சந்திரிகா புதிதாக எந்தவொரு செய்தியையும் நோர்வே அனுசரணையாளர்களூடாக எமக்கு அனுப்பிவைக்கவில்லை என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனுடன் நோர்வே அமைச்சர் பேச்சு

தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கும் நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.


சமாதான முயற்சிகள் தொடர்பான அரசினதும் விடுதலைப் புலிகளினதும் நிலைப்பாடுகள குறித்து இச் சந்திப்பின்போது ஆராய[illegible]டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்[illegible]ளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பீற்றர்சனுடன் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விடார் ஹெல்கிசன் நோர்வே

(12 ஆம் பக்கம் பார்க்க)





## யசீர் அரபாத்தின் உயிர் நேற்று அதிகாலை பிரிந்தது



(பிரான்ஸ்)

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் தனது 75 ஆவது வயதில் பிரான்சில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார். இத் தகவலை பரிஸில் உள்ள பலஸ்தீனியப் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த அரபாத் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரச் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதேவேளை யசீர் அரபாத் உயிரிழந்ததையடுத்து வெற்றிடமாகியுள்ள பலஸ்தீன அதிகார சபையின் அதிபர் பதவிக்கு முன்னாள் பிரதமர் மஹமுட் அப்பாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பலஸ்தீனத் தலைவரின் மறைவையொட்டி பலஸ்தீனத்தில் 40 நாட்கள் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

1929 ஆம் ஆண்டு எகிப்தில் பிறந்த யசீர் அரபாத் 1953 ஆம் தொடக்கம் பலஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அனுப்பிய செய்தி குறித்து ஜனாதிபதியுடன் தீவிர ஆலோசனை

### சொல்ஹெய்ம் வன்னிக்கு செல்வார்?

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று மதியம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்தபின் கொழும்பு திரும்பிய பீற்றர்ஸன் நேற்றிரவு ஜனாதிபதியைச் சந்தித்தார்.

இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்ட செய்தியை அவர் ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளால் நோர்வேக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்ட செய்தி குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதி அனுப்பிய செய்தி குறித்து ஊடகங்களுக்கு பின்னர் தெரிவிக்குமாறு நோர்வே குழுவினர் கேட்டதற்கு இணங்க விடுதலைப் புலிகளும் கருத்துத் தெரிவிக்க மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியுடனான சந்திப்பினை முடித்துக்கொண்டு நோர்வே அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரபாத்தின் மறைவுக்கு புலிகள் அனுதாபம்

பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தின் இழப்பு பலஸ்தீனிய மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். இன்றைய இக்கட்டான வேளையில் அவரின் இழப்புக்கு விடுதலைப் புலிகள் ஆழ்ந்த கவலை தெரிவிப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கவே நாம் பாராளுமன்றிற்கு சென்றிருக்கின்றோம்

## வன்னி மாவட்ட எம். பி.கனகரத்தினம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழ் மாணவர்கள் மீதான தரப்படுத்தல் அமுல் படுத்தப்பட்ட காரணத்தினாலேயே தமிழ் மாணவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயுதப்போராட்டம் வலுவடைவதற்கு அரசாங்கமே காரணமாக இருந்தது என மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் ம.யெகூ தலைமையில் நடைபெற்ற அத்தியாவசிய திட்டமிடல் விவசாயக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூலம், வடகிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட நாம் தமிழ தேசியத்தையும், தமிழர் தாயகத்தையும் வலியுறுத்தி எமது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகவே பாராளுமன்று சென்றிருக்கின்றோமே தவிர பாலங்களோ, பாதைகளோ, அமைத்துத் தருவோம் என்று கடந்தகால அரசியல்வாதிகளைப் போல் இன்று ஒரு கதை, நாளை ஒருகதை பேசி மக்களை ஒரு போதும் ஏமாற்ற மாட்டோம்.

இருந்தும் அரசால் வழங்கப்படும் சிறுநிதியை சகூட நாட்டின் அபிவிருத்திக்காக,வே செலவு செய்கின்றோம்.

அடையாள அட் டை மசோதாவுக்கு எதிராக தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே வாக்களித்தார்கள். அரசாங்கத்தால் அச்சட்டத்தை நிறைவேற்ற முடிந்தாலும், ஒரு வருடகால எல்லைக்குள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டு விடும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

30 வருடகாலமாக முற்றாக அடையாள அட்டையை வழங்க முடியாதவர்கள் ஒரு வருட காலத்தில் வடகிழக்கில் உள்ள 15 இலட்சம் மக்களுக்கு எவ்வாறு இவ் அட்டையை வழங்கப்ப போகின்றார்கள் எனக் கேள்வி எழுப்பிய கனகனரத்தினம் அரசு இவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தேசிய அடையாள அட்டையை வழங்க மறுத்தால் அவர்களால் வாக்களிக்க முடியாமல் போகும் நிலை ஏற்படும். அந்நிலையில் அடையாள அட்டை இல்லாதோர் போராட்டத்தில் இணைய வேண்டடிய நிலையே ஏற்படும்.

இவ்வாறான நிலையை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

நாங்கள் அதிகாரப்பகிர்வு சம்பந்தமாகவும், இடைக்கால தன்னாட்சி சம்பந்தமாகவும் எமது தாயகக் கோட்பாட்டை மையமாக வைத்து, எமது நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்கள் மத்தியலும், வெளிநாட்டுத் தூதராலயங்களிற்கும் எடுத்துக் கூறி அதனை வலியுறுத்தி வருகின்றோம்.

இவைதவிர கண்டியிலே உள்ள பௌத்த பீடாதிபதியை சந்திக்கச் சென்ற போது அவருடன் பேசிக் கொண்டிருந்த வேளை, வெளியே ஏற்பட்ட சில சம்பவங்களால் நாம் மனம் சோர்ந்து விடவில்லை. அங்கே நாம் தைரியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்பட்டோம். 50ற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எமக்கு எதிராக கோஷமெழுப்பினார்கள். ஏனைய சிங்கள மக்கள் அதனை பொருட்படுத்தவில்லை.

இது ஒரு புறமிருக்க மாவீரர்கள் எமது கண்கண்ட தெய்வங்கள். அவர்களின் புனிதமான நாளை கொண்டாடவேண்டும். அப்போது தான் மரனித்த மாவீரர்களின் இலட்சியங்கள் நிறைவேறும் எனவும் அவர் தெரிவித்தார். (க-128)

### கோரிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் மீளக்குடியமர்ந்த விவசாயிகளுக்கு உள்ளீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பெருமபாக உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியேறிய மக்கள் விவசாய உள்ளீடுகளை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றமையைக் சுட்டிக்காட்டியே இவ் விவசாய உள்ளீடுகளை பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-35)

### அகண்ட நாம பஜனை

(கற்கோவளம்)

பருத்தித்துறை சாயிமந்திரில் நாளை சனிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் அகண்டநாம பஜனை நடைபெறவுள்ளது. (ப-104)

# நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த எம்மாலான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

## ரொய்ட்டருக்கு ஜனாதிபதி செவ்வி

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

ஆட்சிககு வந்து 6 மாதங்களாகிவிட்டது. அன்று தொடக்கம் நாம் சும்மாயிருக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நாம் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகிவருகிறோம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நோர்வேயின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் பீற்றர்யனுக்கு ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி இரவு விருத்து அளித்ததோடு அவருடன் பேச்சுவார்த்தையையும் மேற் கொண்டார்.

இச் சந்திப்பை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மாளிகையில் வைத்து ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு செவ்வியளிக்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துரைக்கையில்,

இரு தசாப்தகாலமாக இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினை மூலமான யுத்தத்திற்கு முடிவுகாண்பது அவசியம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லவுள்ளேன். அதற்கு தற்போது புதிய வழிமுறைகளை எமது அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

ஆனால், எம்மால் மேற்கொள்ளப்பட்டுவரும் இம் முயற்சிகளில் சில வழிகளில் ஓட்டைகள் காணப்படுகின்றன. அதனால் இம் முயற்சிகள் தடைப்பட்டுப்போயுள்ளன.

நாட்டின் தலைவி என்ற வகையில், இனப் பிரச்சினையை தீர்வுக்குக் கொண்டுவருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் என்னால் எடுக்கப்படும் ஆனால், விடுதலைப்புலிகளின் தலைவருக்கோ இந்தயோசனை இல்லை.

தற்போதும் அவர் நாட்டை இரண்டு துண்டாகப் பிரிப்பதிலேயே பகல் கனவு காண்கின்றார். சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக நாம் பல்வேறு தீர்வுத்திட்டங்களை முன்வைத்துள்ளோம். ஆனால், இது தொடர்பாக நாங்கள் தற்போது எதுவும் கூறமுடியாத நிலையிலேயே உள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க சாதகமான முன்னேற்றங்கள காணப்படுகின்றன. இதற்கு எவ்வளவு காலம் செல்லும் என எனக்குத்தெரியாது. ஆனால், நான இதில் பூரண நம்பிக்கை வைத்துளளேன் எனவும் தெரிவித்தார். (ற-121)


## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

### யாழ்ப்பாணம்

### வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2005

### REGISTRATION OF SUPPLIERS -2005

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் அலுவலகத்திற்கும் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருட்களையும் சேவையினையும் வழங்கக் கூடிய வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. உடைத்த சல்லிக்கல் (Crushed Metal) - 1/2", 3/4"
02. மணல்
03. மணல்காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tor Steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07. கட்டிட வேலைகளுக்கான உபகரணங்கள்
08. காகதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருட்களும் (Stationary and office Requisites)

**சேவை**

**வாகனம்பழுதுபார்த்தல்**

மேற்கூறப்பட்ட பொருட்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புவர்கள் 03.12.2004 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத் தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம் வழங்கப்படக்கூடிய பொருள் விபரம் கொண்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**விநியோக உத்தியோகத்தர்,**
இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய்.

தொலைபேசி இல. 021 222 2239

(C/692)


# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிடின் நாடளாவியரீதியில் போராட்டம் நடாத்தப்படும்

## ஐ.தே.க. எச்சரிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர், அரச ஊழியர்களுக்கு எழுபது வீதத்தை அல்லது குறைந்த பட்சம் 7 ஆயிரத்து 500 ரூபாவை சம்பள அதிகரிப்பாக வழங்குவதற்குத் தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

அதனடிப்படையில், எதிர்வரும் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ள கூட்டமைப்பு அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் இச் சம்பள அதிகரிப்பை ஆவனசெய்யவேண்டும் எனக் குறிப்பிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் ஜே.வி.பியின் அமைச்சர் ஒருவரும், ஜனாதிபதியும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதாக உறுதியளித்திருந்தனர்.

இந்த இருவரும் ஆட்சியைக் கைப்பறறுவதற்காகத் தேர்தலுக்கு முன்னர் கூறிய இவ் உறுதிமொழிகளை ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக தேர்தலுக்குப் பின்னரும் கூறிவருகின்றனர்.

எரிபோருள் விலை உயர்வு அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு, அரசாங்கம் தனது வாக்குறுதிகளைப் புறக்கணிக்க முறபட்டால், அரசுக்கெதிராக நாடு முழுவதும் பாரிய போராட்டங் கள் முன்னெடுக்கப்படும். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவுள்ளது எனவும் வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-121)

## புகையிரத ஓடுபாதைகள் சிரமதானம் செய்யப்படுகின்றன

யுத்தம் காரணமாக யாழ்ப்பாணதற்கான புகையிரதப் போக்குவரத்து சேவை தடைப்பட்டு பல



வருடங்கள் ஆகியுள்ளது.

இதனால், யாழ்ப்பாணப் புகையிரத ஓடுபாதைகள் பாவனையின்றி இருப்பதனால் அவ்விடங்கள் பற்றைகள் முளைத்து காணப்படுகின்றன. அத்துடன், மக்கள் அவ்விடங்களில் கழிவுப்பொருட்களை கொட்டி வருவதனாலும் அவ்விடங்கள் துப்பரவு இன்றி காணப்படுகின்றன.

இதனால் அவ்விடங்களில் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளதால் இவ்விடங்களை யாழ்.மாநகரசபை வருடாவருடம் சிரமதானம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று இவ் வருடமும் யாழ்.மாநகரசபை ஊழியர்கள் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (க-19)

### சமயதீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அனுசரணையுடன் சமய தீட்சை வழங்கும் நிகழ்வொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.00மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதியில் நடைபெறவுள்ளது.

சைவசமய தீட்சை பெறவிரும்புவோரை சைவ ஆசார சீலர்களாக குறித்த நேரத்திற்குச் செல்லுமாறு நிகழ்வை ஏற்பாடு செய்த ஆலய நிர்வாக சபையினர் கேட்டுள்ளனர். (ச-49)

### தீவிரவாதிகளின் தாக்குதல்களால் அமெ. படைகள் திணறல்

# தீவிரவாதிகளுக்கு சரணடையும் எண்ணம் அறவே இல்லை என்கிறார் அமெ. தளபதி

(பலூஜா)

சதாம் ஆதரவாளர்கள் தாக்குதலைச சமாளிக்கமுடியாமல் அமெரிக்க டாங்கிப் படை திணறி வருகிறது.

ஈராக் மீது அமெரிக்கா தலைமையில் கூட்டு இராணுவம், படையெடுத்து ஒரு ஆண்டுக்கு மேலாகிறது. அங்கு பிரதமா அல்லாவி தலைமையில் தற்காலிக அரசு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்கக் கூட்டுப் படை சிப்பாய்களுக்கும சதாம் ஆதரவாளர்களுக்குமிடையே மோதல்கள் நடந்துவருகின்றன.

தலைநகர் பாக்தாத்தில் இருந்து 50கிலோமீற்றர் தூரத்திலுள்ள பலூஜா நகரம் இன்னும் சதாம்ஹுசேன் ஆதரவாளர்கள் வசமேயுள்ளது. அங்கு சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அந்த நகரில் சதாம் ஹுசேன் ஆதரவாளர்கள் அமெரிக்கப் படைக்குப் பெரிய சவாலாகவுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக வெளிநாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதிகள் போரிடுகிறார்கள்.

சதாம் ஹுசேன் ஆதரவாளர்கள் முறையாக வியூகம் அமைத்துப் போரிடுகிறாாகள்.

பலூஜா நகரைப் பிடிக்க அமெரிக்கப் படை கடந்த திங்கட்கிழமை தாக்குதல தொடங்கியது. அமெரிக்கக் கடற்படை, தரைப்படை ஆகியன மும்முரமாகத தாக்குதல் நடத்தின. டாங்கிப் படை துணையாக போரிட்டது. ஹெலிகாப்டர்கள் குண்டுகளை வீசின. சதாம் ஹுசேன் ஆதரவாளர்களது எதிர்த்தாக்குதல அதிவேகமாக இருக்கிறது.

பலூஜா பிரதான தெருவில் டாங்கிப படை சென்றபோது பெரியளவில் தாக்குதலை சமாளிக்கவேண்டியிருநதது. அது பற்றி அமெரிக்கத் தளபதி காஸ்டில்லோ கூறியதாவது:

"தீவிரவாதிகள் ஏராளமாகவுள்ளனர். பல முனைகளிலிருந்து தாக்குதல்களை நடத்துகின்றனர். வீட்டுக் கூரைகளிலிருநது இயந்திரத் துப்பாக்கிகளால் தாக்குகின்றனர். டாங்கிகள் மீது ராக்கெட்டுகளை வீசுகிறார்கள. அவர்கள போரிடுவதைப் பாாத்தால சரணடையும் எண்ணம் இருப பதாகத் தெரியவில்லை.

டாங்கிப் படையினர் 6 கொரில்லாக்களைக் கொனறனர். கடற்படையினால 2 பேர் படுகாயமடைந்தனர்.

நான்கைந்து பேர் சாதாரண உடையில் வந்து திடீரென்று தாக்குதல் நடத்தினர். சிலர் ஈராக் அரசு படையைச் சேர்ந்தவர்கள் போல் வந்து திடீரென்று தாக்குதல நடத்தினர்.

பலூஜாவைச் சுற்றி தீவிரவாதிகள முகாம்களிலிருந்த ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டன. மசூதிகளில் விமான எதிர்ப்புப் பீரங்கி உட்பட நவீன ஆயுதங்கள் கைப பற்றப்பட்டுள்ளன.

குறுகிய தெருக்கள் வழியாக 70 டன டாங்கி வேகமாகப் போகமுடியாமல் இருப்பதால் தீவிரவாதிகள் இலகுவாகத் தாக்குதல் நடத்துகிறார்கள். இதில் அமெரிககப் படைகள் அதிக இழப்புக்களைச் சந்தித்துள்ளன." (ப)




அமெரிக்க லொஸ் ஏஞ் ஜெல்சில் உள்ள வெஸ்ட் உட பகுதியில் ஈராக் மீது போர் தொடுத்தது உட்பட போரை எதிர்த்து 200 இற்கும் மேற் பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடபட்டனர்.

# தாய்வானில் நிலநடுக்கம்

தாய்வானில் தீவுப்பகுதிகளில் திடீரெனறு நிலநடுக்கம் ஏற்பட்டது. தைபே நகரில் கட்டிடங்கள் அதிர்ந்தன. சில கட்டிடகங்களில் விரிசல் விழுந்தன. ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் 7.5 புள்ளிகளாகப் பதிவாகியது.

ஆனாலும் உயிர்ச்சேதம் பற்றி உறுதியாகத தகவல்கள எதுவும் இல்லை. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு தாய்வானில் ஏற்பட்ட பூகம்பத்தில் 2300 பேர் பலியானார்கள் எனபது குறிபபடததக்கது. (ப)

# அரபாத்தின் இறுதிச்சடங்குக்கு ரமலாவில் விரிவான ஏற்பாடுகள்

### பலத்த எதிர்ப்புக்கள் மத்தியிலும் இஸ்ரேல் அனுமதி



பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்துக்கு இறுதிச்சடங்கு செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கோமா நிலையிலுள்ளார்.

பாரிஸிலுள்ள இராணுவ மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சையளிக்கப் படுகிறது. செயற்கை சுவாசக் கருவிகள மூலம் அவர் உயிர் வாழ்கிறார். அவருடைய கோமா நிலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. எனவே, செயற்கை சுவாசக் கருவிகளை எடுத்துவிடலாமா என்று பலஸ்தீனத் தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

பலஸ்தீனத்தைச் சேர்ந்த மூத்த மதத் தலைவாகள் பாரிஸ் விரைந்துள்ளனர். அரபாத்துக்கு அளிக்கப்படும் செயற்கை சுவாசக் கருவிகயை எடுத்துவிட்டு, அவருடைய மரண அறிவிப்பு இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலஸ்தீனத்தில் அரபாத்துக்கு இறுதிச்சடங்கு செய்ய ஏற்பாடுகள் தீவிரமாகச் செய்யப்படுகின்றன. பலஸ்தனத்தில் மேற்கு கரையில் அமைந்த ரமலா நகரில் அரபாத்தின் உடல் புதைக்கப்படவிருககிறது. ரமலாவில் அவருடைய உடலை அடக்கம் செய்ய இஸ்ரேல் அரசு நேற்று அனுமதி வழஙகியது.

பிரதமா ஏரியல் ஷரோன் தலைமையில நடந்த இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நீண்ட நேரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவுக்கு சில இராணுவத் தளபதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனா. இருந்தபோதிலும அனுமதியளிக்கபபட்டது. (ப)

WORLD NEWS
உலக தரிசனம்

# ஜப்பானில் மீண்டும் தொடர் பூகம்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் மீண்டும் பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டது. கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பத்தின் அதிர்ச்சியிலிருந்து மக்கள் மீளாத நிலையில், மீண்டும் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டுள்ளதால மக்கள் பெரும்பீதி அடைந்துள்ளனர்.

டோக்கியோவிலிருந்து 250 கி.மீ. தொலைவிலுள்ள நிகாடா பிராந்தியத்தில கடந்த திங்களன்று பூகம்பம் ஏற்பட்டது. காலை 11.16 மணிக்கு ஏற்பட்ட பூகம்பம், ரிக்டர் அளவில் 5.8 ஆகப் பதிவானது. அதைததொடர்ந்து சிறு சிறு அதிர்வுகள் தொடர்ந்தவண்ணம் இருந்தன.

இதில் சேதவிபரங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. நிவாரணப் பணிகள் மேற்கொள்ள அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பூகம்பத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. மக்கள் பீதியில் அலறிக்கொண்டு வீதியில் ஓடினர். புலலட ரெயின போககுவரதது உடனடியாக ரத்துச்செய்யப்பட்டது. அதேபோல் நெடுஞ்சாலைப் போக்குவரத்துக்கும் தடைவிதிககப்பட்டது. (ப)

# கூந்தல் அலங்காரப் போட்டி



தாய்வான் நாட்டின் தைபே நகரில் வித்தியாசமான அழகிப்போட்டி நடைபெற்றது. கூந்தல் அலங்காரம், முடிதிருத்துவோர் ஆகியோரின் திறமையை வெளிபபடுத்தும் போட்டி இது.

இந்தப் போட்டிக்கு கூந்தல் அலஙகாரக் கலைஞர்கள் 300ற்கும் மேற்பட்டவாகள் கலநதுகொண்டனர். ஏராளமான மாடல் அழகிகளுக்கு இவர்கள் முடிதிருத்தம் செய்தனர். முடிதிருத்தி கூடுதல் அலங்காரம் செய்துகொண்ட அழகிகள் அணிவகுத்து வந்த காட்சி.


# தாய்வான் பிரச்சினையில் சீனாவுக்கு புஷ் ஆதரவு

### தாய்வானியர்கள் அதிருப்தி

அமெரிக்காவில் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோர்ஜ் புஷ சீன அதிபர் ஹுஜிண்டாவுடன் தொலைபேசியில் பேசினார். இருவரும் பல்வேறு விடயங்கள் குறித்து நீண்டநேரம் பேசினார்கள். சீனா - அமெரிக்கா இடையே விரைவில் பேச்சுவார்த்தை தொடங்குவது என்றும் இரு தலைவர்களும் முடிவெடுத்தனர்.

தாய்வான் தன்னாட்சி பெற்று செயலபட்டு வந்தாலும் அது சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிதான். அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாறுதலும் இல்லை என்றும் புஷ் சீனாவுக்கு ஆதரவாகத் தனது கருத்தை வெளியிட்டார். சீனாவுடன் இணைய தாய்வான் மறுத்தால் அதன் மது தாக்குதல் நடத்துவது என்று சீனா திட்டமிட்டுள்ளது.

இதற்கு அமெரிக்க அதிபர் தமது ஆதரவைத தெரிவித்திருப்பதுடன் படை உதவிகளையும் வழங்குவதறகு உடன்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இது குறித்து தாய்வான் நாட்டவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (ப)



# இன்று ஒரு தகவல்

## சட்டமும் தண்டனையும்

ஒருவர் இருந்தார் எதற்கெடுத்தாலும் சட்டம் பேசுவார். "சட்டநுணுக்கங்களை என் விரல் நுனியில் வைத்திருக்கிறேன்' என்பார். அதையும் எப்படிச் சொல்வார் என்றாலோ பொயின்டெல்லாம் என்! பிங்கர் டிப்பில் வைத்திருக்றேன் என்பார். சரி அவரது விரல் நுனியில என்ன தான் வைத்திருக்கிறார் என்று பார்த்தேன்... நகம் தான் வைத்திருந்தார் நீள நீளமாக வேறு எதுவும என் கண்ணுக்குத் தெரியவில்லை. ஒருவேளை அந்தக் கூரான நகத்தைத் தான் "சட்டநுணுக்கம் " என்று சொன்னாரே?

அவர் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும் ஆனால நாமெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை தெரியுமா? சட்டம் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சட்டமே அதை ஏற்றுக் கொள்வ தில்லை. **Ignorance of Law is not an excuse**.

லைற் இல்லாமல் சைக்கிளில் செல்கிறோம் பொலிஸ் பிடித்து நிதிமன்றில் நிறுத்தி விடுகிறார்கள். அங்கே நாம்... " விளக்கு இல்லாமல் சைக்கிளில் செல்வது தவறு என்று எனக்குத் தெரியாது" என்று சொன்னால அங்கே அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதனால சட்டம் எனக்குத் தெரியாது என்று சாதாரண மனிதன கூட சொல்ல முடியாது. அதைச் சட்டம் ஏற்றுக் கொள் ளாது. சட்டத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமை.

அதேபோல் தான் ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்து விட்டு... அந்த குற்றத்தை நான் நேரடியாகச் செய்யவில்லை.. அதனால் என்னை விட்டு விடுங்கள். என்று சொன்னால் கேட்கமாட்டார்கள். சட்டத்தின் கீழ குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை உண்டு. குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கும தண்டனை உண்டு.

குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது என்றால் என்ன? சட்டம் என்ன சொல்கிறது தெரியுமா? " ஒரு நபரை குற்றம் புரியுமாறு தூண்டுதல் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி செய்து அந்த சதியின் விளைவாக ஒரு சட்டவிரோதமான காரியத்தைச செய்வது அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத் தைச் செய்யாமல் இருப்பது. வேண்டுமென்றே ஒரு குற்றச் செயல் புரிவதற்கு அல்லது. சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்கு உதவி செய்வது. ஆகியவற்றைக் குற்றத்திற்கு உடந் தையாக இருத்தல்" என்று சொல்கிறது.

இன்னுமொரு விடயத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்து வேறொரு குற்றம் புரியப்பட்டால் அந்தக் குற்றத் திற்கு உடந்தையாக இருந்தவருக்கு. செய்யப்பட்ட குற்றத் திற்குப் பொறுப்பு சார்வதுடன் தாமே அந்தக் குற்றம் புரிவதற்கு நேரடி உடந்தையாக இருந்ததாகவும் கொள்ளப்படும்.

அதனால் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிது என்னவென்றால்... விஷத்தை நேரடியாக ஒருவருக்குக் கொடுத்தாலும் ஒன்று தான். இன்னொரு வரிடம் கொடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் ஒன்று தான். தண்ட னையிலிருந்து தப்பிக்கொள்வதற்கு சாமர்த்தியமாக வாதாடிப் பார்க்கலாம். இருந்தாலும் சட்டம் அதை ஒத்துக் கொள்ளாது.

ஒருவன் இப்படித்தான்ஒரு தவறு செய்து விட்டான். சாதாரண தவறு இல்லை. பெரிய குற்றம்! கொலைக் குற்றம் அதாவது ஒரு சிறுவன் தனது தாய் தந்தை யரைக் கொன்றுவிட்டான்.நீதிமன்றம் அவனுக்கு மரண தண்டனை விதித்தது. இறுதியாக நீதிபதி அவனைப் பார்த்து " நீ கடைசியாக உன் தரப்பினால் ஏதாவது கூற விரும்பினால் கூறு" என்றார்.

அந்தச் சிறுவன் சொன்னான் "ஐயா! நீதிபதி அவர்களே என் தாயையும் தந்தையையும் நான் தான் கொன்றேன். அப்போது ஏதோ ஒரு கோபத்தில் அப்படிச் செய்து விட்டேன். ஆனால் இப்போது அப்பா அம்மா மீது அளவற்ற பாசம் எனக்கு உண்டாகி விட்டது. அதுமட்டு மல்ல இப்போது நான் தாய் தந்தையற்ற அநாதை.

இப்போது எந்த நேரமும் அவர்களுடைய நினைவாகவே இருக்கிறேன். அதனால் என்னை விடுதலை செய்ய வேண்டும்" என்றான். எல்லாவற்றையும் நீதிபதி பொறுமையாகக் கேட்டுவிட்டார். கடைசி யாக இப்படித் தீர்ப்புக் கூறினார். எப்படித் தெரியுமா?

" இந்தச் சிறுவன் குற்றத்தை ஒத்துக் கொண்டான். அதே நேரத்தில் இப்போது தனது தாய் தந்தை மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறான். அதைத் தவிர தான் அநாதையாக இருக்கிறேன் என்ற நினைப்பு வேறு. இவற்றைக் கருணையுடன் பரிசீலனை செய்து அவனை அவனது பெற்றோரிடம் அனுப்புவது தான் நல்லது என்று அவனுக்கு மரண தண்டனை வழங்குகிறேன்" என்றார். இவனும் பெற்றோரிடம போய்ச் சேர்ந்தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

சமாதானம் குறித்த நம்பிக்கையை

# அரசு-புலிகளிடையே கட்டியெழுப்புவதே நோர்வே எதிர்நோக்கும் பாரிய சவால்

## இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானிப்பதை விட இரு தரப்பினருக்குமிடையில் தற்போது சீர்குலைந்துள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதே நோர்வே எதிர்நோக்கும் பிரதான சவால் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன், துணை அமைச்சர் விடார் ஹெல்கீசன் மற்றும் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹேய்ம் ஆகியோர் தற்போது இலங்கையில் தங்கியிருக்கின்றார்கள்.சமாதானப் பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவாத்தைகளை நடாத்தி வருகின்றனர்.

எனினும் இருதரப்பு சமாதானப் பேச்சுவார்த்தை குறுகிய காலத்திற்குள் ஆரம்பமாகும் என்ற எதிபாபாப்பு நோர்வேயிடம் இல்லை.இது தொடர்பாக கொழும்பிலுள்ள இராஜ தந்திரிகளின் கருத்துக்களின் படி, இடைக்கால நிர்வாக யோசனையின படி பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண டாலும் அது தொடாபான நிகழ்சி நிரலிலுள்ள சில வசனங்களில் இரு தரப்பினாடையேயும் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இதற்குக் காரணம் இரு தரப்பினருக்குமிடையில் காணபபடும் நம்பிக்கையீனமாகும் . பேச்சுவாத்தைகள் ஆரம்பிப்பதற்கோ அல்லது அதில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கோ முரண்பாடுகள் இல்லை போல் தெரிகின்றது.அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் கொண்டுள்ளனர்.அதுபோல் விடுதலைப் புலிகள் அரசாங்கம் தொடர்பாக நம்பிக்கையில்லாத் தன்மை காணப்படுகின்றது.

இதற்கு தீர்வு காணப்படும் வரை இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என எதிபார்க்க முடியாதுள்ளது.இந் நிலையில் தற்போது இரு தரப்பினருககுமிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புவதே நோர்வே எதிர்நோக்குகின்ற பிரதான சவாலாகும் எனவும் இராஜதந்திர வட்டாரங்கள்மேலும்சுட்டிககாட்டுகின்றன. (ற)

# கடமை நேரம் குறித்த சுற்று நிருபத்துக்கு ஆய்வு கூட தொழிற்சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)

கடமை நேரம் சம்பந்தமான புதிய வழிமுறையை அறிவித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்துக்கு வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சிசுரகுமார நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு அறிவித்துள்ள புதிய வழிமுறையின் அடிப்படையில் பலதரப்பட்ட நேரங்களிலும் கடமையாற்றுமாறு எம்மை பலவந்தப்படுத்தப்படுகிறது. எனவே சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கடமை நேரம் தொடர்பான புதிய வழிமுறையை குறிப்பிட்டுள்ள மேற்படி சுற்று நிருபத்தை நடைமுறைக்கு இடுகையில் ஏற்படக் கூடிய பிரச்சினைக்கு அதிகாரிகள் பொருத்தமான தீர்வைக் காணாவிட்டால் நாளை வெள்ளிக்கிழமை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை எமது சங்கத்தினர் மேற்கொள்வார்கள்.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(க-60)

## இராசிபலன்

**12.11.2004** (ஐப்பசி 27, வெள்ளிக்கிழமை)

அமாவாசை முன்னிரவு 8.40மணிவரை

சுவாதி மு.ப. 9.33 மணிவரை

இராகுகாலம் 10.37-12.07 மணிவரை

சுபநேரம் 6.07- 7.37 மணிவரை

அமாவாசை விரதம், ஐப்பசி வெள்ளி 4ஆம் வாரம்

கௌரி விரதம் 21ஆம் நாள்

மேடம் சுபகாரியம், அபூர்வ சந்திப்பு, சௌக்கிய விருத்தி, தெய்வ தரிசனம்.

இடபம் நலல சம்பவம்,தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வசிந்தை, விருந்துபசாரம்.

மிதுனம் தொழில் சிந்தை, குடும்பக் கவலை, சிறு வியாதி, முயற்சி தாமதம்.

கடகம் ரோகபயம், மாதாசுகம், வேலைச் சுமை, நிலைமாற்றம்.

சிங்கம் சகோரதர் உதவி, தெய்வ தரிசனம், பிரயாண அனுகூலம், தொழில் விருத்தி.

கன்னி தொழில் கஷ்டம், வீண் மனஸ்தாபம், முயற்சி தாமதம், பணவிரயம்.

துலாம் தெய்வ சிந்தை, தேக நலன், பெரியோர் ஆதரவு, புதிய திட்டம்.

விருச்சிகம் நண்பர்கள் விரோதம், சுப செலவு, சயனச்சுகக்குறைவு, காரிய தாமதம்.

தனுசு பெருமையடைதல், தெய்வ சிந்தை, எடுத்தகருமங்கள் கைகூடும், சகோதரர் உதவி.

மகரம் தூரதேசசெய்தி, அதிகாரம், தொழில் நன்மை, உறவினர் சந்திப்பு.

கும்பம் புதிய திட்டமிடல், பித்தரோகம், பிரயாணம், காரியதாமதம்.

மீனம் எதிர்பாராத பிரச்சினை, ரோகபயம், பணத்தட்டுப்பாடு, முயற்சிதாமதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## யாழ்.வலயப் பாடசாலைகளின் குறைபாடுகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்விப பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோரிடம் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகள் தேவைகள் தொடர்பாக பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ள யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆசிரியர் கல்விப்பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்படி நேற்று மு.ப. 10.00மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் மாலை 3.00மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இக்கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அதேபோல் இன்றும் மு.ப.9.30றக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும்,மாலை 3.00மணிக்கு வரணி மகாவித்தியாலயததிலும் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.(க-47,5,43)

## யாழ்.குடாநாட்டில் அடைமழை தொடர்கிறது தாழ்வான பகுதிகளில் வாழ்வோர் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணக குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வருகின்ற மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக கிராமப்புறங்களில் உள்ள தற்காலிக கொட்டில் வீடுகளில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தகைய குடும்பங்களின் கொட்டில் வீடுகள் தாழ்ந்த காணிகளில் அமைந்துள்ளமையினால், மழை வெள்ளம் இலகுவில் அங்கு ஆக்கிரமித்துள்ளது. இதனால் பெரும் சிரமங்களுக்கு மத்திலேயே தமது குழந்தைகளுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள வீடுகளின் காணிகள் இவர்களுக்குச் சொந்தமில்லாமல் இருப்பதால் இத்தகைய குடும்பங்களின் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வருவதில்லை என அறியப்படுகின்றது.

அத்துடன்,சொந்த வீடுகள காணிகள் அற்ற இவ்வாறான குடும்பங்கள தமது இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு பற்றைகளையும் வெளியிடங்களையும் நாடிச் சென்று வருவதால் இங்குள்ளவர்களின் சுகாதார நிலைமைகளும் மோசமடைந்து தொற்று நோய்கள் பரவக்கூடிய ஏது நிலைகளும் உருவாக்கக் கூடிய அபாயநிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (ப-16)

# நீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

**அத்தியாயம்-4**
**தொடர் -II**

**மு. திருச்செல்வம்**

## வல்வைத் தீர்மானங்கள்

1971, பெப்ரவரி7ஆம் நாள் வல்வெட்டித் துறையில் கூடிய நான்கு கட்சிகள், தமிழினத்தின் சார்பில் அரசியலமைப்பு யாக்க அவையின் முன் வைத்த ஆகக் குறைந்த பட்சக் கோரிக்கைகள் ஒன்பது அவையாவன:-

(1) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டும். அவற்றின் திட்டவட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(2) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் நீதி நிர்வாகமொழிகளாக இருக்கவேண்டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ்விரு மொழிகளின்உபயோகம் பற்றிய விதிகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

(3) இலங்கையின் எப்பாகத்திலும் சிங்களவரோ, தமிழரோ தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களமோ தமிழோ அவரவர் தாய் மொழயே இருத்தல் போதனா மொழியாய் இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் இலவசமாக அக்கல்விக்கு வசதி செய்யவேண்டியது அரசின் கடமையாகும்.

(5) உயர்தரக்கல்வி நிலையங்களில் சேருவதற்கோ, அரசாங்க சேவையில் சேருவதற்கோ, தன் தாய் மொழியில் பரீட்சை எடுத்துத் தன் தகுதிக்கு ஏற்பச் சேரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

(6) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ, நிர்வாக ஒழுங்கீனங்களைப் பற்றியோ, நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியலமைப்பில் அமைய வேண்டும். நீதி நிர்வாகத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இருத்தல் ஆகாது.

(7) இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும் சமயம் பற்றியும் இந்திய அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்படவேண்டும்.

(8) இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும். ஆனால் பௌத்த இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டும்.

(9) (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின்,

(ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதி உடையவராயின்,

(இ) 15.11.48க்கு முன் இருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவராகவும் இலங்கைக் குடியுரிமை உடையரவராக இருப்பதற்கு விரும்புபவராயும் இருப்பின் அவர்கள் எல்லோரையும் இலங்கைக் குடியுரிமை உடையவர்களாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் அரசியலமைப்பில் ஏற்கப்படவேண்டும். வம்சாவளிக்குடியுரிமை உடையவர்க்கும், பதிவுக்குடியுரிமை உடையவர்க்கும் எவ்வித பாகுபாடும் இருத்தல் ஆகாது. எக்காரணம் கொண்டும் எவருடைய குடியுரிமையும் பறிக்கப்படலாகாது.

இந்த ஒன்பது கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடாத்தச் சந்திக்கப்போவதாக மாநாட்டுச் செயலாளர் நாகராஜா பிரதமருக்கு 1971 பெப்ரவரி 22இல் கடிதம் எழுதினார் 1971 எப்பிரல் முதலாம் நாள் பிரதமர் நாகராஜாவிற்குப் பதில் அனுப்பினார். சந்திக்கவும் பேசவும் தனக்கு நேரமில்லை எனத் தெரிவித்தார்.

பிரதமரின் பதிலை அவையில் கூறிய தர்மலிங்கம், தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பிரதமரோடு தொடர்பு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால், மூன்றாவது அடிப்படைத் தீர்மானத்தின் மீதுள்ள விவாதத்தைப் பின்போடக் கேட்டார்.

அவையினர் ஒப்புக்கொள்ளவில்லை. மூதறிஞர் செல்வநாயகம் சார்பில் தர்மலிங்கம் முன்மொழிந்த திருத்தம் அவையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மூன்றாவது அடிப்படைத் தீர்மானமும் திருத்தம் இன்றியே நிறைவேற்றப்பட்டது.

சிங்களமா? தமிழுமா?

முதல் மூன்று அடிப்படைத் தீர்மானங்களுள் முதலாவதைத்தவிர்ந்த ஏனைய இரண்டுக்கும் மூதறிஞர் செல்வநாயகம் திருத்தம் கொண்டு வந்தார் திருத்தங்களை அவை ஏற்றுக் கொள்ளவில்லை.

38 அடிப்படைத் தீர்மானங்கள் அரசிலமைப்பு யாக்க அவை முன் சமர்ப்பிக்கப்பட்டன. ஒவ்வொன்றாக எடுத்துநோக்கப்பட்டன. அடுத்தடுத்து எடுத்து நோக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களில் மேலும் சிலவற்றுக்குத் தமிரசுக்கட்சியின் சார்பில் திருத்தங்கள் முன் மொழியப்பட்டன. வல்வை மாநாட்டு தீர்மானங்களில் அடிப்படையில் திருத்தங்கள் முன் மொழியப்பட்டன. அவை ஒன்று கூட அரசியலமைப்பு யாக்க அவையால் ஏற்றுக்கொள் ளப்படவில்லை.

1971 ஜூன் 24ஆம் நாள் 11ஆவது அடிப்படைத்தீர்மானம் அரசியலமைப்பு யாக்க அவையில் முன்மொழியப்பட்டது.

"எல்லாச் சட்டங்களும் சிங்களமொழியில் சட்டமாக்கப்படல்வேண்டும் அவ்வாறு சட்டமாக்கப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிப்பெயர்ப்பும் இருத்தல் வேண்டும்" மூதறிஞர் செல்வநாயகம் சார்பில் ஊர்காவற்றுறைத்தொகுதி உறுப்பினர் கா.பொ.இரத்தினம் திருத்தம் ஒன்றை முன்மொழிந்தார்.

சிங்களமும் தமிழும்,

(அ) சட்டங்கள் ஆக்கப்பட வேண்டிய மொழிகளாதல் வேண்டும்.

(ஆ) ஸ்ரீலங்காவின் அரச கரும மொழிகளாதல் வேண்டும்.

(இ) நீதிமன்றங்களில் மொழிகளாதல் வேண்டும் அத்துடன்

(ஈ) எல்லாச்சட்டங்களும் பிரசுரிக்கப்படவேண்டிய மொழிகளாதல் வேண்டும்.

இந்த தீர்மானத்தை ஒட்டியும் திருத்தத்தையொட்டியும் 1971 ஜூன் 28 நாள் வரை விவாதித்தனர். மூதறிஞர் செல்வநாயகம் சார்பில் முன்மொழியப்பட்ட திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 13 பேர் திருத்தத்திற்குச் சார்பாகவும் 88பேர் திருத்தத்திற்கு மாறாகவும் வாக்களித்தனர். சின்னையா அருளம்பலம் (நல்லூர்), முத்துகணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (நியமனம்), ஆறுமுகம் தியாகராஜா (வட்டுக்கோட்டை) ஆகிய தமிழ் உறுப்பினர்கள் மூதறிஞர் செல்வநாயகம் கொண்டுவந்த திருத்தத்திற்கு மாறாக வாக்களித்ததுடன் அடிப்படைத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். திருத்தம் அவையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அடிப்படைத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அவையை விட்டு வெளியேறுதல்

11ஆவது அடிப்படைத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் உடனடியாக அரசியலமைப்பு யாக்க அவையில் மூதறிஞர் செல்வநாயகம் உரையாற்றினார். "பிரதமர் அரசியலமைப்பு யாக்க அவையைக் கூட்டிய பொழுது நாங்கள் பங்கு பற்றுவதனால் உள்ளப்பயன் பற்றி கருத்துவேறுபாடு இருந்தது. எனினும் மாண்பு மிகு பிரதமரின் அழைப்பில் உள்ள நல்நோக்கத்தை ஏற்றுப் பங்குபற்றுவது எனத்தீர்மானித்தோம். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## நிதி உதவி

யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக் கருவிகள கொள்வனவு செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் ஒரு இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். (ப-35)

★ ★ ★

(மருதங்கேணி)

மருதங்கேணி ப.நோ. கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு கணனிகளை கொள்வனவு செய்வதற்கு 4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து இதனை ஒதுக்கியுள்ளார். (ப-35)

★ ★ ★

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவு அபிவிருத்திக்கென பன்முகப் படுததப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப் பினர்களான செ.கஜேந்திரன், என்.கே. சிவாஜிலிங்கம், கே.ஈழ வேந்தன் சி.சிவநேசன், பத்மினி சிதம பரநாதன் ஆகியோர் ஒதுக்கியுள் ளனர்.

இவ் நிதியைக்கொண்டு பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப-35)

★ ★ ★

(சாவகச்சேரி)

2004ஆம் ஆண்டு பனமுகப்படு தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பிராந்திய உட்கட்டமைப்பு அமைச்சினால் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் சங்கத்தானை நாமகள் முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் ரூபாவும் தென்னிந்திய திருச்சபையினால் நடாத்தப்படும் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 40 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் அரச அதிபர் தென்மராட்சி பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். (ப-47)

★ ★ ★

(துன்னாலை)

சமுர்த்தி அதிகார சபையின் கிராமிய அபிவிருத்தி பிரிவினால் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிற்கு ஒரு லட்சத்து 27 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் கரணவாய் அல்வாய் கிராம அலுவலர் பிரிவுகளில் வீதி திருத்தமும் உடுப்பிட்டி பகுதியில் பொதுக்கிணறு திருத்தமும் செய்யப்படவுள்ளது. (ப-101,7)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவலர் குருபூசையையொட்டி யாழ்ப்பாணம சைவ பரிபாலன சபையால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படவுள்ள பேச்சுப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக இப போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## இலவச திருமணப்பதிவு

இது வரை காலமும் திருமணமாகி சட்டமுறைப்படி பதிவுத்திருமணம் செய்து கொள்ளத்தவறியவர்கள் இலவசமாக திருமணம் பதிவு செய்துகொள்வதற்காக கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடவடிக்கை மேற் கொளளப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்டோா தமது பெயா விபரங்களை நாளைய தினத்திற்கு முன்னர் சங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

## விபரம் கோரல்

யாழ்.மாவட்டத்தில் ஜெய பூமி காணிகையளிப் புத்திட்டத்தின கீழ் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் மாதாந்தம் 100 பேரினது விபரங்களை அனுப்பி வைக்குமாறு மாகாணகாணி ஆணையாளர் இ. ரவீந்திரன் கடித மூலம் சகல பிரதேச செயலகங்களையும் கோரியுள்ளார்.

காணி ஒன்று பெற்றுக்கொண்டவர்களின் காணி உறுதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

## மரக்கறி வியாபார கொட்டகை

சாவகச்சேரி நகர பொதுச்சந்தையில் பாவணையாளர்களின் தொகை அதிகரித்து வருவதனால் வியாபார நடவடிக்கையினை மேம்படுத்துவதற்காக சபையால் 15 லட்சம் ரூபா செலவில் மரக்கறி சந்தைக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஞாயிறு தொடக்கம் இயங்கி வருகின்றமை குறிப்பிடததக்கது. (ப-47)

## வெள்ளம்

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக வசந்தபுரம்கிராமம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இங்கு பெருமளவு மழை நீர் தேங்கியுள்ளதால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் தேன்றியுள்ளது.

எது வித அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் இப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை எதிர் கொள்கின்றனர். (ப-47)

## திருட்டு

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடிவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

விக்கிரகம் அண்மையில் தான் பிரதிஷ்டை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ப-47)

## கோரிக்கை

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைகளில் மீண்டும் பற்சிகிச்சை நிலையத்தினை நடாத்துவதற்கு வேணடிய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினை சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் கோரியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இப் பறசிகிச்சை நிலையம் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-47)

## மாடுகளைத் திருடியவர்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

களவாக மாடு ஏற்றி வந்தவர்களை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வேலணையில் இருந்து 12 மாடுகளை லொறி ஒன்றில் களவாக ஏற்றி வந்த நான்கு பேரையும் யாழ் பொலிஸார் பண்ணைப் பாலத்தில் வைத்து கைது செய்து யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

மாடுகளை களவாக ஏற்றி வந்த 4பேரிடமும் தண்டப் பணமாக தலா 500 ரூபாவும் தர்மப் பணமாக தலா 500 ரூபாவும் அறவிடப்பட்டது. பின்னர் லொறியும் மாடும் உரியவர்களிடம் பொலிஸாரல் கையளிக்கப்பட்டது. (க-19)

## ஆண்டுவிழா

சுன்னாகம்-கந்தரோடை ஸ்கந்தவரோதையாக் கல்லூரியின் 110ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு புதிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ்விழாவை முன்னிட்டு, ஸ்கந்தாவின் முகாமையாளர்களுள் ஒருவராகி கலாநிதி பி.சுப்பிரமணியத்தின் உருவச் சிலைஒன்றும் கல்லூரி வளாகத்தில் நிறுவப்படவிருக்கின்றது. (ப-49)

# நம்பிக்கை மலர்கள்

சிறுகதை

கணபதி கணேசன்



முன்னாள் செம்பருத்தி ஆசிரியர் அமரர் கணபதி கணேசனின் 2ஆம் ஆண்டு நினைவாக இச் சிறுகதை வெளியிடப்படுகின்றது.

அந்த பஸ் அல்லைப்பிட்டியை நெருங்கிகொண்டிருந்தது. பின்னால் நான்கு கவசவண்டிகளில் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். டிரைவர் அவர்களுக்கு வழிவிடுவதற்காக வண்டியை ஓரமாக நிறுத்தினார். ஆனால் இராணுவத்தினர் பஸ்சுககு முன்னாலும், பின்னாலும் வண்டிகளை நிறுத்தி விட்டு திடும் திடும் என துப்பாக்களுடன் குதித்து பஸ்சுக்குள் நுழைந்தனர்.

எல்லோரையும் நோட்டமிட்ட பின்பு அனைவரையும் இறங்கும்படி உத்தரவிட்டனர். நான் எனது வயதான தாயாரின் கையைப் பிடித்துக்கொண்டு இறங்கினேன. வயதானவர்களையும் பெண்களையும் தவிர மற்ற எல்லோரையும் ரோட்டில் முழங்காலில் நிற்கும்படி ஒருவன் உத்தரவிட்டான். நான் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த எனது தாயாரை அணைத்துக்கொண்டே நின்றேன்.

'ஏய்! நீ அங்க போடா'! என்னை ஒருவன் இழுத்துக் கீழே தள்ளினான்.

அடுத்து எல்லோரும் சோதனையிடப்பட்டனர். அவர்களிடம் இருந்த பணத்தை தவிர்த்து ஏனைய பொருள்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

என்னுடைய முறை வந்தது. சட்டைப் பையில் இருந்தது 107ரூபாய் சொச்சம். ஒரு லாண்டரி பில் அடுத்து ஒரு கடை பில், அதையடுத்து நான்காக மடிக்கப்பட்ட ஒரு நோட்டீஸ்.

சோதனை செய்த் கொமாண்டர் அதனைத் தமிழ் தெரிந்த ஒருவனிடம் கொடுக்கிறான். படிக்கும் போது அவன் முகம் மலர்கிறது. அவன் ஏதோ சிங்களத்தில் இவனிடம் கூற, இவன்;

'இதை யார் உன்னிடம் கொடுத்தது?'

'எங்க போயிட்டு வாறாய்?'

'உண்ட மற்ற ஆட்கள் எங்க?'

'சொல்லுடா... சொல்லுடா...'

பதில் சொல்லுமுன் கேள்விகள் சரமாரியாகத் தொடர்கிறது. நான் ஒன்றும் சொல்லமுடியாமல் உறைந்து போய் நின்றேன்.

'நீ மட்டும் ஜீப்பில ஏறு. மற்றவங்க பஸ்ஸில போகலாம். இந்த உத்தரவு உக்கிரமாய் ஒலித்த போதுதான் எனக்கு சுயபிரக்ஞை வந்தது. என் தாயார் தனிமைப் படுத்தப்பட்டது நினைவுக்கு வந்தது. நான் சொன்னேன்;

'என் தயாரால் தனியே போக முடியாது. தவிரவும் அவரிடம் பணம் கிடையாது. யாழ்ப்பாணத்தில் இருந்து தனியே அவரால் வீட்டிற்குப் போகமுடியுமா....'

இராணுவக்காரன் வாய்க்குப் பதில் அவன் கைதான் பேசியது. 'ஏய் நீ ஏறு முதலில். பஸ்ஸில் இருப்பவங்க உன் அம்மாவை நடுரோட்டில் விட்டுட்டுப் போகமாட்டார்கள். தமிழங்க ரொம்ப ஒற்றுமையானவங்க' பிடரியில் அடிபட்ட நான் ஜீப்பினுள் விழ்ந்தேன். ஜீப் புறப்பட்டது. துரத்தே பஸ்சினுள் அம்மாவின் புலம்பல் லேசாகக் கேட்டது.

'உன் வீடு எங்க இருக்கு?'

'நீ எந்த இயக்கத்தைச் சேர்ந்தவன்?'

'யார் யார் இருக்கிறீங்க?'

'நீ என்ன வேலை செய்கிறாய்?'

'எப்ப இந்தியாவில் இருந்து வந்த நீ?' ஜீப்ல இருந்த ஐந்து பேரிடம் இருந்தும் கேள்விகள் சரமாரியாகப் புறப்பட்டன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை என்ன செய்வதென்றும் தெரியவில்லை.

'டேய் உன் வீடு எங்க இருக்கு?' முதல் கேள்விக்குப் பதிலளிக்காததால் கோபமுற்று என் தலைமயிரைப் பிடித்து இழுததவாறே கேட்டான்.

'திருநெல்வேலி'

ஊரின் பெயரைக் கேட்டதும் அவர்கள் முகம் மலர்ந்தது. உண்மையில் இவன் ஏதாவது ஒரு இயக்கத்தை சார்நதவனாகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம துளிர்விட்டிருக்க வேண்டும்.

'இப்ப உன் வீட்டுக்குப் போய் 'செக்' பண்ண வேண்டும். வீட்டுக்கு வழிகாடடு...' என்றான் ஒருவன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. சேர்த்து வைத்திருந்த புத்தகங்கள், சஞ்சிகைகள், எழுதிப் பேணி வைத்திருக்கும் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் என்னை இவர்களுக்கு இனங்காட்டி விடுமோ?

'இவன் இப்ப உண்மையைக் கக்குவான் என்று எண்ண முடியாது. நோஞ்சான் பயலாக இருக்கிறான். நாம் ஏதாவது விசாரிக்கும்போது ஏதாவது ஆகிவிட்டால்? எனவே இவனை முதலில் பொலிஸில் ஒப்படைத்து... பின்னால் விசாரணைக்கு அழைத்துச் செல்வோம்...' கொமாண்டர் போலிருந்த ஒருவன் இதனைக் கூற மற்றவர்கள் ஆமோதித்தனர்.

உடனே கொமாண்டர் முன்னாலும் பின்னாலும் வந்து கொண்டிருந்த வாகனங்களுக்கு 'வயலர்சில்' தகவல அனுப்பினான் - இந்தியாவில் இருந்து வந்ததாகக் கருதப்படும் பயங்கரவாதியை பஸ்சில் கைது செய்யப்பட்டவன். யாழ் பொலிஸில் ஒப்படைத்துச் செல்வோம். பின்னர் அவனை விசாரணைக்காக முகாமிற்கு அழைத்துச் செல்வோம்.'

இவற்றைக் கேட்ட எனக்கு எதிர்காலம் பளிச்சென்று மனத்திரையில் பதிந்தது. இராணுவ முகாமில் பல வருடக்கணக்கில் அடைபட்டுக் கிடக்கும் தமிழ் இளைஞர்களில் இனி நானும் ஒருவனா? இந்த உண்மை உரைத்ததும் நான் பதட்டத்தை விட்டு உரக்கவே கூறினேன்.

'நீங்க சொல்வது பொய். நான் தமிழ்நாட்டிலிருந்து வந்தவனுமல்ல எனக்கும் பயங்கரவாத இளைஞர்களுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை' என்றேன் சிங்களத்தில்.

'உனக்கு எப்படிச் சிங்களம் தெரியும்?'

'படித்திருக்கிறேன்'

'ஏன் படித்தாய்?'

'சிங்களம் படித்ததினால் இப்படியான இக்கட்டான ஒரு நிலை வரும் என்று தெரிந்திருந்தால் நான் படித்திருக்கவேமாட்டேன்' - நான் சொன்னது கேள்வி கேட்டவனுக்குப் புரியவில்லை. பக்கத்திலிருந்த தமிழ் தெரிந்தவன் மொழிபெயர்த்துச் சொன்னதும் அவனுக்குக் கோபம் கொப்பளித்தது.

எனது தலைமயிரைப் பிடித்திழுத்து தனது முழங்கால்களினால் முதுகில் ஓங்கிக் குத்தினான். தொடர்ந்து ஒவ்வொருவரும் குத்த ஆரம்பிக்க, நான் வலிதாங்க முடியாது கதற ஒருவன் எனது வாயைப் பொத்தினான். மீண்டும் அடிக்கத் தயார்ப்படுத்துவதற்குள் பொலிஸ் நிலையம் வந்துவிடவே அடிப்பதை நிறுத்தும்படி கட்டளையிடப்படுகிறது.

நான் இறக்கப்படுகின்றேன். என்னைபோலவே ஒவவொரு வாகனத்திலிருந்தும் பல இளைஞர்கள் இறக்கப்படுகின்றனர்.

பொலிஸில் எல்லோரையும் லாக் -அப்பில் வைக்கும்படியும், என்னைத் தனியே பாதுகாப்பில் வைக்குமாறும் நான் மிகவும் முக்கியமானவன் என்றும் பொலிசுக்குச் சொல்லப்பட்டது.

'எங்கள் லாப் -அப் பாதுகாப்பானதுதான்' - என்று ஒரு பொலிஸ்காரன் வேடிக்கையாகச் சொன்னதும் கொமாண்டர் அட்டகாசமாகச் சிரித்தபடி;

'இவன் முக்கியம். எனக்கு மட்டும்தான் தெரியும். இவனிடமிருந்து கறக்கும் விடயங்களிலிருந்து பயங்கரவாதிகளை பூண்டோடு ஒழித்துவிடமுடியும்' என்று சொல்லி புத்தகத்தில் கையெழுத்திட்டனர்.

பொலிஸில் பெயர், முகவரி, தொழில் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு லாக் -அப்பில் அடைக்குமபோது பொலிஸ்காரன் சொன்னான்;

'புலியை பிடிக்கச் சொன்னால் பூனையைப் பிடித்துக் கொண்டு திரிகின்றார்கள்'. அவர்களுக்கு எப்போதுமே இராணுவத்தினர் மீது ஒரு பரிகாச உணர்வுதான். ஆனால் இவர்கள் கையில் இப்படிப்பட்ட ஒரு கேஸ் கிடைத்தால் இதைவிடவும் மோசமாகவும் நடந்துகொள்ளக் கூடும்.

சுமார் ஒருமணி நேரத்தில் அவர்கள் திரும்பவும் வந்தார்கள். பொலிஸில் கையெழுத்திட்டு என்னை மட்டும் அழைத்துச் சென்றார்கள். வீட்டுக்குச் செல்லும் வழியில் மீண்டும் விசாரணை தொடர்ந்தது.

'உனக்கு எத்தனை வயது?'

'இருபத்தெட்டு'

'நல்ல வயசுதான்' கிண்டலாகச் சொன்னான் ஒருவன்.

'பிள்ளைகள் இருக்கா?'

'ஒரு ஆண் குழந்தை'

'தமிழ் ஈழத்துக்கு ஆண் குழந்தைகள்தான் அவசியம்' அவன் இயல்பாகவே ஆத்திரப்பட்டுக் கூறினான்.

'வீட்டில் யார் யார் இருக்காங்க.....?'

'மனைவி, குழந்தை, அம்மா!'

'மூன்று பேர் மட்டும் தானா?' நான் தலையாட்டினேன்.

வீட்டு ஒழுங்கையில் இராணுவ வாகனங்கள் திரும்பியதும் வீதியில் நின்ற எல்லோரும் பயந்து ஓடுகின்றனர். வீட்டைச் சுற்றிலும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. பக்கத்து வீட்டுக்குள் புகுந்து மதில்களுக்குள் பதுங்கி துப்பாக்கியை நீண்டியபடி சுமார் இருபது பேர் நின்றிருந்தார்கள்.

என்னை இறக்கும்படி சொல்லப்பட்டது. சுற்றி மூன்று துப்பாககி முனைகள் நீண்டிருநதன.

விறாந்தையில் அம்மா படுத்துக்கிடந்தாள். அவள் தனது எழுபத்தைந்து வருடகால அனுபவத்தில் இப்படியொரு நிகழ்ச்சியைக் கற்பனை பண்ணிக்கூட பார்த்திருக்கமுடியாது. அம்மா முன்னாலேயே வந்து சொல்லியிருக்கிறாள்.

இராணுவத்துடன் என்னைக் கண்டதும் அதிர்ந்து நின்ற என் மனைவி நடுங்கிக்கொண்டு நின்றாள். ஆனால் அந்தக் கண்கள்...

அந்தப் பதட்டத்திலும் மனைவி புத்தகங்கள், கடிதங்கள் மற்றும் சந்தேகத்திற்கு.....



(7. பக்கம் பார்க்க)

# நம்பிக்கை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இடமான அனைத்துக் பொருள்களையும் வீட்டுக்கு வெளியே பாதுகாப்பான இடத்தற்கு அனுப்பியிருந்ததை அந்தக் கண்களில் அவதானிக்க முடிந்தது. கண்களினால் செய்திகளை பரிமாறிக் கொள்ளமுடியும் என்பதை துப்பாக்கிகள் உணர்ந்திருக்க நியாயமில்லை.

கொமாண்டர் ஆரம்பித்தான்; 'மேடம்! உங்க கணவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று நம்புறம். அதற்கான ஆதாரம் இருக்கிறது. எங்களுக்கு அவர் தேவையில்லை. உண்மையை மட்டும் சொல்லச் சொல்லுங்க... அவரை இங்கேயே விட்டுட்டுப் போறம். எங்களுக்குத்தேவை உண்மை மட்டும்தான். இவருக்கு ஆட்களைத் தெரியும். காட்டிக் கொடுத்தால் இவரை இங்கேயே விட்டுட்டுப் போறம். உண்மையைச் சொல்லச்சொல்லுங்கள்... உங்கள் கணவரை இங்கேயே விட்டுட்டுப் போறம்...'

பெண்மையின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவன் மாதிரி 'அவரை இங்கேயே விட்டுட்டுப்போறம்...' என்று அவன் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தான்.

'இவர் சேர்ந்த கூட்டத்தையும், யார் யார்?, எங்கே இருக்கிறார்கள்? என்பதையும் சொன்னால் இவரை விட்டிடுவோம்'

'இல்லை... அவருக்கு எந்த இயக்கங்களுடனும் தொடர்பு இருக்கமுடியாது'

நிதானமாகவே பதிலளித்தாள்.

'இவர் இந்தியாவுக்கு எப்பவாவது போயிருக்கிறாரா?'

'திருமணமான இரண்டு வருடகாலத்தில் அவர் இந்தியா போனதில்லை. அதற்கு முன்பு அவர் போயிருப்பதைப்பற்றித் தெரியாது.'

இதற்கிடையில் வீடு இரண்டாயிருந்தது. பொருட்கள் தூக்கிவீசப்பட்டிருந்தன. துணிமணிகள் சிதறியிருந்தது. குழந்தையின் விளையாட்டுச் சாமான்கள் உடைத்து நொறுக்கப்பட்டிருந்தன.

கொமாண்டரின் 'வயலஸ்' கிரீச்சிட்டது. அவன் பதிலளித்து பேசியபோது அவன் முகத்தில் கலவரம் பரவியது. வார்த்தைகள் பேசப்படுகின்ற மொழி தவிர்ந்த ஒரு சங்கேத வார்த்தையில் பரிமாறப்படடது. ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியவாறு அவன் பதட்டத்துடன் சொன்னான்.

'இனி நாம் இங்கிருந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாது. இவனை காம்புக்கு கொண்டுபோவோம். உண்மையை வரவழைக்க எனக்குத் தெரியும்' – கரகரவென்று என்னை இழுத்துக்கொண்டு சென்றார்கள. மனைவியின் அலறல் மனதில் பல அதிர்வுகளை உண்டாக்கியது.

ஜீப்பில் ஏறுமுன் அவன் சொன்னான்; 'நான் இவனை அழைத்துக்கொண்டு காம்புக்கு போறன். மற்றவர்கள் கோண்டாவில் ரயில்வே ஸ்ரேசனுக்குப் போங்கள். ரயிலை எரித்துப்போட்டார்கள்'.

'விர்' என்று எல்லா வாகனங்களும் விரைந்தன. என்னை ஒருவன் தூக்கி உள்ளே எறிந்தான். தொடர்ந்து ஒரே அடியும் உதையும்தான். அதற்குள் மூவர்தான் இருந்தார்கள். ஆனால் முந்நூறு பேர் இருந்து தாக்கியதுமாதிரி இருந்தது. காம்பிற்குப் போவதற்கு முன்னால் என்னை கொன்றுவிடுவார்கள் என்று நான் நிஜமாகவே நம்பினேன்.

ஒருவன் துப்பாக்கி நுனியால் என் தொடையில் குத்தியவாறே சொன்னான்;

'உன்னை நாங்க சும்மா விடமாட்டோம். ஒன்றும் தெரியாதவன் மாதிரி நடிக்கிறாயா? உனக்கு ஒரு கலியாணம், மனைவி, குழந்தை... ஆ.....' அவன் சப்பாத்துக்கால் என் அடிவயிற்றில் இறங்கியது.

எனக்கு மயக்கமாக இருந்தது. அவனது காலடியிலேயே சாய்ந்தேன். அவன் உதறி எறிந்த போது உதடு உடைந்து இரத்தம் கொட்டியது,

பின்னால் ஜீப்பை துரத்திக்கொண்டு வருவதுமாதிரி ஒரு மினிபஸ் விரைந்துகொண்டிருந்தது. அதற்கு 'சைட்' கொடுக்கவேணடாம் என்று கட்டளையிட்டான் கொமாண்டர். அதற்குள் மினி பஸ் ஜீப்பை நெருங்கிவிட்டது. மினிபஸ்சிலிருந்து ஜப்பை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள். இவர்கள் ஜீப்பினுள் படுத்துக்கொண்டு திருப்பிச் சுட்டார்கள்.

ஒருவன் என் முதுகில் காலைப்போட்டு தலையை நிமிர்த்தியபடியே சொன்னான்.

'இவனை மீட்கத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள். இவன் ஏதோ இயக்கத்தின் தலைவனாக அல்லது மிக முக்கியவனாக இருக்கவேண்டும். இவனைக்கொன்றுவிட்டுத்தான் மறுவேலை'

அவன் இப்படிச் சொல்லிமுடிப்பதற்குள் மூவரும் என்னை இழுத்துக் கதவு ஓரத்தல் நீளமாகப் போட்டு என்மீது ஏறிப் படுத்துக்கொண்டே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் திரும்பிச் சுடும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டும் என்மீதே துளைத்தன. ஒரு குண்டு என் தலையில் பாய்ந்தது. அதற்குள் அவர்கள் மின்னல் வேகத்தில் திரும்பி மறைந்து விட்டார்கள். இவர்கள் தரும்பிக் கலைக்கவில்லை.

என் தலையை இழுத்துத் தனது நெஞ்சுக்கு நேரே நிறுத்தியபடி அவன் சொன்னான்,

'பார்த்தாயா? நீ அவர்களைக் காட்டிக் கொடுக்கப்போகிறாய் என்ற பயத்தில் அவர்கள் உன்னைக் கொல்ல வந்திருக்கிறார்கள். நீ அவர்களைக் காப்பாற்றப் போகிறாயா? நீ அவர்கள் யார் என்பதைச் சொல்லிவிடு. அவர்களை நாம் கவனித்துக்கொள்கிறோம்' அவர்கள் கேள்வியில் கேலியும் கிண்டலும் கலந்திருந்தது. ஆனால் குரல் ஆணவமாக ஒலித்தது நான் மூச்சடைக்கச் சொன்னேன்.

'நான் காட்டிக்கொடுப்பேன் என்று எதிர்பார்க்கிறீர்களா? எதையாவது சாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தாலும் காட்டிக் கொடுக்கக்கூடிய கோழைத்தனம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை. துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பயந்து.... நான் காட்டிக்கொடுக்க... முற்படடால்...... நாளை'

அவன் மேற்கொண்டு அறியும் ஆவலில் என்னை உலுக்கும்போது என்னுடல்...?

# அகதிகள்...!

இவர்கள்......
இழந்துபோனவர்கள்;
எதையென்று சொல்லமுடியாமல்
எல்லாவற்றையும் இழந்தவர்கள்!

இவர்களுள்.....
உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காய்
உடலை ஊனமாக்கியவர்களும் உண்டு!


கற்பைப் பறிகொடுத்தாலும்
கரங்களில் தவழும்
குழந்தைகளுக்காய் உயிர்
வாழத் துணிந்தவர்களும் உண்டு!

காலப் பெட்டகத்துள்
காப்பாற்றி வைத்த அத்தனை
திரவியங்களையும்
இழந்துபோன பின்பும்
எதற்காக உயிரை
கையில் பிடித்துக்கொண்டு
கடலையும் தாண்டி இக்கரை
வந்துசேர்ந்தார்கள்..........?

இவர்கள் நாடு இவர்களதாய்
என்றைக்கு இருக்குமோ;
அன்றைக்கு இவர்கள்
அந்த தேசத்தின் மன்னர்களாய்
முடிசூடிக்கொண்டு நாடு திரும்பும்
கனவுகளுடன் காத்திருக்கிறார்கள்;
தயவு செய்து இவர்களது
கனவுகளைக் களைத்து விடாதீர்!

- கணபதி கணேசன்

# குறுக்கெழுத்துப் போட்டி இல-35



*அனுப்பவேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல – 35**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 18ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)எதுவும எஞ்சாத அழிவு இ... னக் குறிககும். (4)வேகமாக ஓடக்கூடிய மிருகம். (5)அல்லலுறுவோர் மீது காட்டும் உணர்வு. (7)மிககச சிறந்தது – இதனைக் குறக்கும். (8)வானத்தில் இது தென்படும். (10)குறிக்கோள – இதனை இப்படியுமழைப்பர்.

## மேலிருந்து கீழ்

(1)குற்றமற்றவனை இப்படியுமழைப்பர். (2)அடிப்படை –இதனைக் குறிக்கும். (3)எறும்புகள் இவ்வாறு செல்லும். (6)இதில் நல்லெண்ணம் உருவாகவேண்டும். (9)இரவு – இப்படியுமழைப்பர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 33இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.கனகாம்பரம் 4.சிக்கனம் 5.துருத்தி 6.அழகி 7.பாறை 8.நிசி

**மேலிருந்து கீழ்**

1.கச்சிதம் 2.கானகம் 3.பயம் 5.துகில் 6.அறை 9.சித்திரம்.

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

முதற் பரிசு :- A.அனித்தா, கீரிமலை வீதி, சித்தன்கேணி.

இரண்டாம் பரிசு :- க.யசிகரன், கட்டுடை, மானிப்பாய்.

மூனறாம் பரிசு :- திருமதி. S.பாக்கியநாதன், பொது - நூலகம், சங்கானை.

## போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

சி.விவேக், வியாபாரிமூலை. செ.இராசதேவி, கோப்பாய். கே.இராஜகோபால், தொல்புரம். ம.றமணன், நீர்வேலி. வ.மன்னா அன்ரனி, குருநகர். ச.வாசுகி, கோண்டாவில். லோ.அபிராமி, வல்வெட்டித்துறை. சு.நிகேதினி, யாழ்ப்பாணம். ம.நக்கீரன், மலலாகம். ஆ.அனுஷா, சிததன்கேணி. ம.கீர்த்தனா, கோண்டாவில். கே.அரசேஸ்வரன, நல்லூர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. V.C.சோதிநாதன், பண்ணாகம, த.சி.சயநதன, வடடுக்கோட்டை. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. வி.இளங்கோ, கோப்பாய். சு.விதுஷன், வணணையூர். இ.லக்ஷியா, கொக்குவில. சு.சிவதர்சன், கொககுவில். தி.மயூரகிரி, நீர்வேலி. சி.கோபிநாத், கொக்குவில். நா.அகிலன், மானிப்பாய். இ.பாவேந்தன், வரணி.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 26



இவ்வாறு யாத்திரை செய்து திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னை மலாயாவுக்கு வரவேண்டுமென்று தம்பித்துரையவர்களும், பழநியப்ப செட்டியாரும் அழைத்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். நான் வர நேரமில்லை என்று கடிதம் எழுதி வைத்தேன். அப்பொழுது என்னுடன் யாத்திரை செய்து கொண்டிருக்கும் எனது மைத்துனர் (தங்கையின் கணவர்) த.மு.ரங்கசாமி முதலியார் என்னைப் பார்த்து "உங்களுக்குப் பணம் வேண்டாம் என்று எண்ணியிருக்கின்றீரே! மலாயாவில் கிடைக்கும் பணத்தை நம்ம ஊர் காங்கேயநல்லூர் முருகன் திருப்பணிக்குக் கொடுத்தால் அப்பாவுடைய எண்ணம் நிறைவேறியதாக ஆகுமே!" என்று கூறினார்.

காங்கேயநல்லூர் முருகன் கோவில் என்னுடைய தந்தையார் ராஜகோபுர திருப்பணி செய்தார். அருணகிரிநாதரின் ஆராதனை தினமான ஒருநாள் காங்கேயநல்லூர் முருகன் கோயிலில் அபிஷேக ஆராதனைகள் நடந்து கொண்டிருந்தன. என்னுடைய தந்தையார் என்னையும், எனது தமையனாரையும் அழைத்து "நான் இறந்து போனால் என் மீதுள்ள அணிகலன்களை நீங்கள் தானே எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்? இவைகளைக் கழற்றிக் கொடுக்கின்றேன். இவைகளை விற்று இந்தக் கோயில் தளவரிசை போடவும்" என்றார். நாங்கள் "நல்லது" என்றோம். அதேபோல் அவர் அணிந்திருந்த தங்க செஜ்ஜை, தங்கச் செயின், தங்க உருத்திராட்சம் இவைகள்ளைக் கழற்றிக் கொடுத்தார். அவைகளை விற்றதில் 900 ரூபாய் வந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு முருகன் கோயிலில் கல் அடித்தள வரிசைத் திருப்பணி செய்யப்பெற்றது.

1944-இல் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்த பொழுது என் தந்தையார் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். "நீ பீஷ்மாச் சாரியரைப் போல் தந்தை சொல் தட்டாதவன். நம்முடைய கோயில் இருண்டு கிடக்கிறது. அதற்கு மின்சார விளக்கு போடவேண்டும். பணம் அனுப்பி வை!" என்று எழுதியிருந்தார். அக் கடிதத்தைப் படித்தது முதல் இலங் கையைவிட்டுப் புறப்படும் வரை சேர்ந்த பணம் 7500 ரூபாவை அப்பா பெயருக்கு அனுப்பினேன். அப்பணத்தைக் கொண்டு கோயிலில் மின்சாரவிளக்கு அமைத்தார்.

தந்தையார் என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் "எங்கெங்கேயோ திருப்பணி செய்கின்றாயே! பிறந்த ஊராகிய காங்கேயநல்லூர் முருகன் கோயில் திருப்பணியைச் செய்யக் கூடாதா?" என்று கூறுவார். நான் "மற்ற ஊர்களின் திருப்பணியைப் பலரிடம் அணுகி வசூலித்துச் செய்கின்றேன். காங்கேய நல்லூர், வயலூர், வடலூரைப் போல் பிரபலமான ஸ்தலமா? காங்கேயநல்லூருக்கென்று வசூல் செய்ய முடியுமா? நம்முடைய பொருளாதாரம் வரவிறகும் செலவிற்கும் சரியாகத் தானே இருக்கின்றது? நான் என்ன செய்வேன்?" என்று அவருக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன்.

இப்படி பிதாவினுடைய கட்டளை மனத்தின் அடித்தளத்தில் இருந்துகொண்டிருந்தது. என்னுடைய மைத்துனர் "மலாயாவில் வரும் பணத்தை அனுப்புங்கள். முருகன கோயில் திருப்பணி செய்யலாம்" என்று கூறிய வார்த்தையை ஏற்றுக்கொண்டேன்.

தந்தையாருடைய விருப்பம் இதன்மூலம் நிறைவேறும் என்று எண்ணினேன்.

மலாயாவிற்கு "வருகிறேன்" என்று கடிதம் எழுதிவிட்டேன். அவ்வாறு எழுதியபொழுது "முருகா! மலாயாவில் எவ்வளவு வந்தாலும் அவ்வளவையும் உன் திருப்பணிக்கு அனுபபிவிடுவேன்" என்று சங்கல்பம் செய்து கொண்டேன்.

27-3-1956இல் விமான மூலம் சிங்கப்பூருக்குச் சென்றேன். அங்கு சைவ ஆசாரம் குதிரைக் கொம்பு என்று கருதி என் தம்பி சச்சிதானந்தனை உடன் அழைத்துக்கொண்டு சென்றேன். தந்தையாருடைய விருபபம் இதன மூலம் நிறைவேறும் என்று எண்ணினேன்.

### மலாயாவில் பயணம்

விமான நிலையத்தில் கோவிந்தசாமிபிள்ளை, பக்கிரி சாமிபிள்ளை, பழனியப்ப செட்டியார், தமிழ்முரசு ஆசிரியர், சரங்கபாணி முதலிய பல பிரமுகர்கள் மாலைசூட்டி வரவேற்பு செய்தார்கள. சிங்கப்பூரில் நகரத்தார்களுடைய தண்டாயுதபாணி கோவிலில் தங்கினேன். மலாயாவின் பிரயாணத்தைப்பற்றி "மலாயாவின் மாட்சியும், அமர்நாத் காட்சியும்" என்று தனியாகவே ஒரு நூல் எழுதியுள்ளேன்.

சிங்கப்பூரில் விரிவுரைகள் செய்தபின் சிரம்பானுக்கும் சென்றேன். அங்கே தம்பித்துரை அவர்கள் பெரிதும் உபசரித்தார். அவர்தான் வாரியார் வரவேற்புக் குழு செயலாளர். அங்கிருந்து கோலாலம்பூர், ஈபோ, தைப்பிங், பினாங்கு முதலிய பல ஊர்களுக்குச் சென்று விரிவுரை புரிந்தேன். மலாயாவில் நான்கு மாதங்கள் தங்கினேன். பெரும்பாலும் நான் போகாத ஊர்களோ, விரிவுரை செய்யாத ஊர்களோ இல்லை.

என்னுடைய சமய பிரசாரத்தால் தெய்வபக்தி வளர்ந்தது. நாத்திகம் தளர்ந்தது. பலர் சைவமானார்கள். எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகின்றேன்.

கோலக்கஞ்சார் என்ற ஊரில் இரண்டு விரிவுரைகளுக்கு ஒழுங்கு செய்திருந்தது. கோயிலில் பிரசங்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. "நம; பார்வதி பதயே!" என்று நான் சொல்லுவேன். சபையோர்கள் "ஹரஹர மகாதேவா!'! என்று கைகூப்பிச் சொல்லுவார்கள் அப்பொழுது சபையில் டார்ச்சுலைட் போன்ற ஒரு ஒளி தெரிந்தது. அது என்ன என்று உற்றுநோக்கினேன். ஒருவர் அணிந்திருந்த நீலமோதிரத்தின் ஒளி அப்படித் தெரிந்தது.

மறுநாள் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் வழிபாடு நடந்துகொண்டிருந்தது. முதல்நாள் விரிவுரையின் பொழுது நிலக்கல் மோதிரம் போட்டிருந்த அன்பர் அன்று பூசைக்கு வந்திருந்தார். கால் மேல் விழுந்து கதறி அழுதார். நான் "ஏன் அழுகின்றீர்"! என்று ஆறுதல் கூறினேன். அவர் கருமையாகவும், பெரிய மீசையுடனும் காட்சி அளித்தார்.

"சுவாமி! நேற்றுவரை நான் கொடிய அரக்கனாக இருந்தேன். நேற்று உங்கள் விரிவுரையைக் கேட்டவுடனே மனிதனாக ஆகிவிட்டேன். வாரத்திற்கு ஐந்து கோழி அடித்துத் தின்பேன். நேற்றுமுதல் புலால் உண்பதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டேன். என் தலையிலே கைவைத்து என்னனை ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்று கூறி அழுதார்.

நான் "உங்கள ஊரும், பேரும் யாது?" என்று கேட்டேன். அவர் "சுவாமி! நான் செட்டிநாட்டில் முறையூரில் பிறந்தவன். என்பெயர் சின்னையா" என்று கூறினார். அவர் அணிந்திருநத மோதிரத்தை வாங்கிப் பார்த்தேன். "இது என்ன விலை?" என்று கேட்டேன். இது "எங்கஞர் இராணியுடைய மோதிரம் அவர் அடகு வைத்து விட்டார். அதை நான் அடகுக் கடையில் இருந்து 1500 வெள்ளி கொடுத்து வாங்கினேன்" என்றார். அதுதான் அத்துணை ஒளி வீசிக்கொண்டிருந்தது, இவருக்கு இரண்டு மனைவியர் 25 குழந்தைகள் அதற்கபபாலும் இரண்டு குழந்தைகள் பிறந்தன என்று சொன்னார். இவர் அருகில் நடந்த சொற்பொழிவுகளுக்கெல்லாம் வந்துகொண்டிருந்தார்.

(தொடரும்)

## காத்தான்குடி வன்முறைச் சம்பவம் கைதான இருவரும் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவில ஒருவர், விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்றவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட வன்முறைச் சம்பவம தெடர்பாக கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஸஜிதுல் குபா பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளரான அல்ஹாஜ் எம்.அஸ்ரப் என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது பிணை மனுவை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு மவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர், இந்த அனுமதியை வழங்கினார்.

கடநத சனிக்கிழமை அலஹாஜ் ரவூப் மௌலவியின் சகோதரியின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகப்பற்றற்ற நீதிபதி எம்.நூர்டீன் முன்னிலையில் நடைபெற்றது. சாட்சிகள் சந்தேக நபரான மொகமது ஹுசேன் என்பவரை அடையாளம் காட்டத் தவறியதையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் இவரை விடுதலை செய்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, குறிப்பிட்ட வன்முறைச் சம்பவங்கள் காரணமாக காத்தான்குடிப் பிரசேத்திலுள்ள இரண்டு பள்ளிவாசல்களில் தஞ்சம் புகுந்திருந்த சுமார் 500றகும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். (ற-121)

## மாவீரர் தினத்தையொட்டி பல்கலையில் விசேட ஏற்பாடு

தமிழர்களின் வரலாற்றில் பெருவிழாவாகப் போற்றப்படுகின்ற மாவீரர் தின நிகழ்வு பல்கலைக்கழகத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

மண்ணின் விடியலுக்காக மக்கள் விடுதலைக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த புனிதர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், பூசிக்கப்பட வேண்டியவர்கள், தாய் மண்ணை நேசித்து தாய் மண்ணின் விடிவிற்காய் தம் உயிர்களைத் துறந்த உத்தமர்கள். இவர்களை நினைவு கொள்ளும் வகையில எதிர்வரும் 25,26,27ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவுப்பந்தல் அமைத்து மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைத்து எழுச்சியோடும் உணர்வோடும் மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுளன.

அத்துடன், 50வது அகவையில் காலடி வைக்கும தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 26ஆம் திகதி காலை 7.00மணிக்கு பல்கலைக் கழகத்தில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் தமிழீழத் தேசியத் தலைவருக்கும் போராளிகளுக்கும் நல்லாசி வேண்டி விஷேட அபிஷேக ஆராதனைகள் செய்வதற்கும் பல்கலைக்கழகச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, தமிழீழத் தேசியத் தலைவருக்கான வெற்றிக் கேடயமும், வாழ்த்துச் செய்தியும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடாக தேசியத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.(ற-19)

## இசையால் இறைவனையே ஆடவைத்த இனத்தில் பிறந்தவர் நாம்

### தீவக உதவிக் கல்விப்பணிப்பாளர் பெருமிதம்

(புங்குடுதீவு)

இசையால் இறைவனை ஆடவைக்கும் இனம் திராவிடர் இனம். அத்தகைய இனத்தில் பிறந்த எமது பெருமையையும் இசைத் திறமையையும் உலகே அறியும். இவ்வாறு தீவக வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஸ்ரீ இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற உலக அழகியற்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இசையில் மேம்பட்டிருந்த தமிழினம், இசை மூலமே தனது பெருமைகளை நிலைநாட்டியது.

அத்தகைய நிலையிலிருந்து மாறாது இசை, நடனம், சித்திரம் போன்ற கவின் கலைகளை பேணிப் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும் எனவும் இராமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வு கடந்த 5ஆம் திகதி பாடசாலை அதிபர் ந.இராசதுரை தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில நடனம், நாடகம், கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ப-126)

## சிறைக் காவலாளி தாக்கப்பட்ட வழக்கு டிசம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் சிவசுந்தரம் சிறைச்சாலைக் காவலாளியைத் தாக்கியமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

சிறைச்சாலைக் காவலாளி பாலேந்திரன் என்பவர் தாக்கப்பட்டமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கு விசாரணை மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வழக்கு மீண்டும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-19)

## கிராம உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் விரைவில் கோரப்படும்

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்கள பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கென 3 வருடங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் இன்றுவரை அதற்கான பரீட்சை நடத்தப்படாததையிட்டு அப்பதவிக்கு விண்ணப்பித்த ஆயிரக்கணக்கான விண்ணப்பதாரர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமர சிறி தொடங்கொட கருத்துத் தெரிவிக்கையில்,

2 ஆயிரம் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அந்த வெற்றிடங்களை நிரப்ப விரைவில் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்படுமெனவும் கூறினார். (க-60)

# திக்கற்றவருக்குத் தெய்வமே துணை

இந்திரனை நாடிச் சில தேவர்கள் சீகாழி வனத்திற்கு



வந்தார்கள். தேவர்கள் தாம் சூரனால் படும்துயரைத் தேவேந்திரனுக்குப் புகன்று புலம்பினார்கள்.

சூரபதுமனுடைய ஆட்சிக் காலத்தில் அமரர்கோன் அமர லோகத்தல் இருக்க அஞ்சினான். இந்திரன் பிறரறியாமல் குயில் உருக்கொண்டு இந்திராணியுடன் பூவுலகிற்குப் போனான். இந்திரன் மண்ணுலகில் மாற்றாருக்கு மறைந்து மூங்கில் வடிவத்தில் நின்று வருந்தித் தவம் புரிந்தான்.

தேவர்கள் தேவேந்திரனிடத்தில் தெரிவித்தார்கள். "மையார் களத்து மகாதேவர் வரம் பெற்ற சூரனுக்குச் செய்யாத ஏவல் எல்லாம் செய்தோம். நீதி நெறி மானம் இழந்தோம். ஐயா அலுத்தோம் அலுத்தோம்'' என்று அழுது அழுது அரற்றினார்கள்.

இந்திரன் இயம்பினான் - ''நாம் எல்லவரும் வெள்ளி மலைக்குச் செல்வோம். பரமருக்குச் சொல்லி நமது துயர கற்றிக்கொள்வோம்.

''எங்கள் கோவும் நீ குரவனும் நீ" என்று தேவர்கள் மகிழ்ந்தார்கள்.

அயலிலிருந்த அன்னம் பொருவும் நடையாள் அயிராணி அது கேட்டு அலமந்து சொல்வாள்.

## வெள்ளிநற்சிந்தனை

''நெடுங்தகாய்! உங்கள் அன்புடைய ஒரு மகனும் இங்கில்லை, தேவர்களும் இல்லை, ஐராவத யானை இல்லை மாதர் ஒருவரில்லை. பெண்ணொருத்தி தன்னந்தனியிருக்க அந்சேனோ!"

''பெண்ணே! ஐயனார் பெருமான் நமக்கு ஓர் அரனாக இருக்க நீ நைதல் முறையோ நங்காய்! நான் கைலைக்குச் சென்று மீளும் வரை உன்னைக் காக்க வேண்டும் என்று கையடையாக நல்குவேன்'' என்றான் இந்திரன்.

இந்திரன் அரிஅர புத்திரரை அன்போடு வழுத்தினான், ஐயனார் பூரணை - புட்கலை அம்மையார் சமேதராகத்தரிசனம் தந்தார்.

இந்திரன் தான் கயிலைக்குச் சென்று திரும்பும் வரை இந்திராணியை அடைக்கலம் கொடுத்தான்.

செண்டு கைச் செம்மல் வீரமாகாளரை விழித்து இந்திராணியைக் காவல் கொள்ளக் கற்பித்தார். வீரமாகாள தேவர் இந்திராணியைக் கண்காணித்து வந்தார். அம்மையருடன் ஐயனார் மறைந்தருளினார்.

இந்திரன் தேவர்களுடன் கயிலைக்கு ஏகினான். இந்திராணி வனத்தில் இந்திரன் சென்ற காரியம் கைகூடச் சங்கடமின்றித் தவற் செய்திருந்தாள்.

ஒருநாள் ஏதேச்சையாக வந்த அசமுகி இந்திராணியைக் கண்டாள், அசமுகி சூரனிடத்தில் வர வற்புறுத்தினாள். இந்திராணி மறுத்தாள், அசமுகி தன் வலியினால் இந்திராணியை இழுத்துச் சென்றாள்.

இந்திராணி ஐயகோ என்று அரற்றினாள்.

''ஐயனாரே ஓலம்! விண்ணோர்க் காதியே ஓலம் - செண்டார் கையனே ஓலம்! எங்கள் கடவுளே ஓலம், மெய்யர் மெய்யனே ஓலம்! வீரனே ஓலம்!

"பூரணைக் கிறைவா ஓலம் ! புட்கலை கணவா ஓலம் என்று தெய்வத்துணை நாடி நைந்தாள் இந்திராணி.

இந்திராணியின் ஓலம் கேட்டு ஓடிவந்தார் வீரமாகாளர், வாளை உருவினார். சூரன் தங்கை அசமுகியின் கையைத் தடிந்தார். இந்திராணியின் இடர்களைந்தார்.

''அன்னையே! அஞ்சாதே! உன் கணவன் மீண்டு வரும் வரை உன்னைக் காப்பேன்'' என்று ஆறுதல் சொன்னார் வீரமாகாள தேவர். □

சிவசண்முகவடிவேல்

---

# அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாது பொலிஸார் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

பொலிஸார் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் கடமைகளைப் பொறுப்புடன் சீராக நிறைவேற்றவேண்டும்.

எந்தவொரு நபராக இருந்தாலும் சட்டத்தை மீறினால் அவர் தண்டனை அனுபவித்தே 'தீர வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குற்றத்தடுப்பு மீதான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டி குற்றச் செயல்களைத் தடுப்பதற்குப் பிரதான பொறுப்பு வகிக்கும் பொலிஸ் நிறுவனம் ஊழல் நிறைந்ததாக வுள்ளது.

'குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களை பொலிஸார் கைது செய்யத் தவறுவதில் இருந்து இது தெளிவாகப் புலனாகின்றது.

ஒழுக்கத்தைப் பேணுவதன் மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வது அவசியம்.

பதவி உயர்வுகளைப் பொறுவதற்காக சில பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஊழல் நடவடிக்கைகளில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தடுப்பதற்கென விசேட படி ஒன்றை வழங்கும் திட்டமொன்றும் விரைவில் அமுல் செய்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் ஜனா திபதி மேலும் தெரிவித்தார். (க-121)



---

# தினேஷை விடுவிக்கக் கோரும் மகஜருக்காக கையெழுத்துதிரட்டல்

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கை சாரதியான தினேஷ் தர்மேந்திராவை விடுதலை செய்யுமாறு கோரி மகஜர் ஒன்றை அனுப்புவதற்கு இணையத்தளத்தினூடாக பொது மக்களிடமிருந்து கையொப்பங்கள் திரட்டப்பட்டுவருகின்றது.

இந்த மகஜரில் இதுவரை 9 ஆயிரம் பேர் கையொப்பமிட்டுள்ளனர். ஆங்கிலம் மற்றும் அரேபிய மொழிகளில் இந்த மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை 'ட்ரக்' சாரதியான தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணம் ஈராக் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக 14 நாட்களுக்கு முன் தெரியவந்ததையடுத்து தினேஷை விடுதலை செய்யுமாறு அவரது உறவினர்கள் கோரிக்கைவிடுத்தனர்.

அத்துடன், தினேஷை விடுதலை செய்யுமாறு கோரி குறிப்பிட்ட இணையத்தளம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் லஷ்மன்கதிர்காமர் தலைமையில் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது. பிரதிவெளி நாட்டமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரும் குவைத்திலிருந்து வருகை தந்த தினேஷுடன் பணியாற்றிய நூவான் என்பவரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தினேஷ்ராஜட்ணத்தை விடுவிக்க அரேபிய தொலைக்காட்சியொன்றின் ஊடாக தீவிரவாதிகளிற்கு வேண்டுகோள் விடுக்க பிரதியமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். (க-8)

---

# யாழ். மாநகராட்சி மன்றத்தின் சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவ, மாணவியருக்கிடையே யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் நிலையங்களில் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட 5 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வழமைபோலன்றி, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மேற்படி போட்டியில் பங்குபற்றிய காரணத்தினால் இப்போட்டிக்கான முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வருமாறு :-

**பாலர் பிரிவு**

**1 ஆம் இடம் :-** அருளினி தேவபாலன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
**2 ஆம் இடம் :-** பிருந்தா முருகதாஸ் - நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
**3 ஆம் இடம் :-** பாலசுப்பிரமணியம் குசலன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
**3 ஆம் இடம் :-** பிரவீனா பரலோகராசா - நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
விசேட சித்தி - 144 பேர்
திறமைச் சித்தி - 300 பேர்
சாதாரண சித்தி - 259 பேர்

**கீழ்ப்பிரிவு**

**1 ஆம் இடம் :-** சிவராஜா சிவாங்கர் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
**2 ஆம் இடம் :-** ஜதீபா இரத்தினம் - யூனியன் கல்லூரி.
**3 ஆம் இடம் :-** தனுஜா விஜயராஜன் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
விசேட சித்தி - 43 பேர்
திறமைச் சித்தி - 78 பேர்
சாதாரண சித்தி - 110 பேர்

**மத்திய பிரிவு**

**1 ஆம் இடம் :-** அபர்ணா ஜீவரத்தினம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
**2 ஆம் இடம் :-** ஜெசாளினி யோகநாதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
**3 ஆம் இடம் :-** சர்மிகா அருணந்திசிவம் - இராமநாதன் கல்லூரி.
விசேட சித்தி - 09 பேர்
திறமைச் சித்தி - 50 பேர்
சாதாரண சித்தி - 80 பேர்

**மேற் பிரிவு**

**1 ஆம் இடம் :-** பிரசாந் தனபாலசிங்கம் - யூனியன் கல்லூரி.
**2 ஆம் இடம் :-** கலையரசி கணபதிப்பிள்ளை - புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
**2 ஆம் இடம் :-** கல்பனா பாலசுந்தரம் - உடுவில் மகளிர் கல்லூரி.
**2 ஆம் இடம் :-** உஷாலினி நவரத்தினம் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
விசேட சித்தி - 11 பேர்
திறமைச் சித்தி - 92 பேர்
சாதாரண சித்தி - 102 பேர்

**அதிமேற் பிரிவு**

**1 ஆம் இடம் :-** குகப்பிரியா பரராஜசிங்கம் - நயினாதீவு மகா வித்தியாலயம்.
**2 ஆம் இடம் :-** பாலசாந்தி குணசேகரம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
**3 ஆம் இடம் :-** பாலகுமாரி குமாரலிங்கம் - இணுவில் இந்துகல்லூரி.
விசேட சித்தி - 06 பேர்
திறமைச் சித்தி - 59 பேர்
சாதாரண சித்தி - 94 பேர்

மேற்படி போட்டிகளில் முதல் 3 இடங்களையும், விசேட சித்திகளையும் பெற்றவர்களுக்கு மாத்திரமே பரிசளிப்புத் தினத்தன்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஏனைய திறமைச் சித்தி மற்றும் சாதாரண சித்திகளைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் யாவும் காலக்கிரமத்தில் பாடசாலை அதிபர்களிடம் நேரில் கையளிக்கப்படும்.

இதற்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர சபை ஆணையாளருமாகிய கலாநிதி க.குணராசாவின் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

---

# சமாந்தரமாகச் சென்றோருக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம்

(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில் வீதிகளில் சமாந்தரமாக சைக்கிளில் சென்ற குற்றத்திற்காக நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் 21 மாணவ, மாணவியருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இவ் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம், மாணவர்களைக் கடுமையாக எச்சரித்ததுடன், அவர்கள் ஒவ்வொருவரையும் தலா ஆயிரம் ரூபாவை அரச செலவாக செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

வீதி விபத்துக்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதையடுத்து, வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் தற்போது கடுமையாகத் தமது கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-101)

## வீதிசேதம்

நவிண்டில் - பொலிகண்டி வீதியில் இருந்து மேற்குப் புறமாகச் செல்லும் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை வீதி சுமார் 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இவ் வீதியைத் திருத்தித் தருமாறு பிரதேச சபைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இப் பிரதேசப் பொதுமக்களால் வேண்டுகோள்விடுக்கப்பட்டும் எதுவித பயனும் இதுவரை கிடைக்கவில்லை.இது குறித்தும் மக்கள் சினம் தெரிவித்துள்ளனர். (ப-103)

# மறக்க முடியுமா?

## சகலகலா வல்லவர்கள

டெஸ்ட் போட்டிகளைவிட ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளென்றாலே சகல துறை ஆட்டக்காரர்களின் (ஓல்ரவுண்டர்கள்) முக்கியத்துவம் கூடிவிடுகிறது.

அதுவும் எல்லோரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் பரபரப்பான ஒருநாள் போட்டிகளில் 30,40 ஓட்டங்களை அடித்து 2 விக்கெற்றினை வீழ்த்தினால் போதும் அணியில் அவர்களுக்கு இடம் நிரந்தரமாகி விடும். இவற்றோடு அற்புதமாக களத்தடுப்பில் (பீல்டிங்) திறமையும் இருந்து விட்டால் அதன்பின் அவ்வீரரை அசைக்கவே முடியாது.

சகலதுறை ஆட்டக்காரர்கள் இல்லாமல் உலகில் கிரிக்கெற் அணி எதுவுமே இல்லை என்றே கூறலாம். துரதிர்ஷ்டவசமாக இவ்விடயத்தில் இந்திய அணிதான் பின் தங்கி உள்ளது. மற்ற எல்லா அணி களிலும் குறைந்தபட்சம் ஒரு சகல துறை வீரராவது இருப்பார். இவர்கள் போட்டியின் போக்கை சுலபமாக மாற்றி விடுவார்கள்.

முன்னர் ஒரு காலகட்டத்தில் இந்தியாவின் கபிலதேவ், பாகிஸ்தானின் இம்ரான் கான், இங்கிலாந்தின் இயன்பொத்தம் ஆகியோர் மிகச்சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களாகத் திகழ்ந்தார்கள் இவர்களுக்கு ஒருபடி கிழே இறங்கி நியூசிலாந்து அணியின் றிச்சட் ஹாட்லி வலம் வந்தார.

மிகச் சிக்கலான நேரத்தில் விக்கெற்றினை வீழ்த்துவதும், அதிரடியாக சிக்ஸ், பவுண்டரி மழை பொழிந்து வெற்றி இலக்கை எட்டு வதும் இவர்களுக்கு கைவந்தகலை.

தற்போதைய ஆட்டக்காரர்களில் இவர்களுக்கு இணையான சகல துறை வல்லுனரைச் சுட்டிக்காட்டுவது சுலபமல்ல என்றாலும் இவர்களைத் தொட்டுவிடும் தூரத்தில் நிறைய ஆட்டக்காரர்கள் ஏராளமாக உருவாகியிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்க அணியின் ஜக்கலிஸ், இலங்கை அணியின் சனத் ஜெயசூர்யா, இங்கிலாந்து அணியின் அன்ரு பிளின்டோவ், பாகிஸ்தான் அணியின் சொயிப் மாலிக், அவுஸ்திரேலிய அணியின் அன்ரு சைமன்ஸ், மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல ஆகியோரால் அவ்வணிகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகள் ஏராளம். இவர்களைத் தவிரவும் பட்டியலில் இன்னும் பலபேர் உண்டென்றாலும் தொடர்ந்து சிறப்பாக ஆடுபவர்கள் இவர்கள்தான்.

**சனத் ஜெயசூர்யா (இலங்கை)**

1989ஆம் ஆண்டு இலங்கையணியில் அறிமுகமான இவர் வீச்சாளராக அறிமுகமாகி, கடந்த பத்து ஆண்டுகளாக தனது அதிரடி ஆட்டத்தால் கலக்கி வருகிறார். இவர் துடுப்பெடுத்து ஆடும் போதும்சரி, ஓட்டம் எடுக்க ஓடும் போதும் சரி இவர் பாய்கிற வேகத்தைப்பார்த்தால் அவருக்கு 35வயது ஆகிவிட்டது என்பதை நம்புவது கடினம்தான.

35 முறை இவர் ஆட்டநாயகன் விருதையும் பெற்றுள்ளார். பந்துவீச்சில் சிலவேளைகளில் சொதப்பினாலும், துடுப்பாட்டத்தில் அசத்திவிடுவார். துடுப்பாட்டத்தில் சொதப்பினாலும் பந்துவீச்சில் அசத்திவிடுவது இவரது வடிக்கையாகும்.

**அன்ரு பிளிண்டோவ் (இங்கிலாந்து)**

அஜானுபாகுவான தோற்றமுடையவா. 1999ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்காகக் களமிறங்கிய இவர் 75 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1883ஓட்டங்களைக் குவித்துள்ளார். அத்துடன் 72 விக்கெற்றுக்களையும் வீழ்த்தியுள்ளார். அவரின் 1883என்ற ஓட்ட எண்ணிக்கையில 2 சதங்கள், 12 அரைச்சதங் கள என்பன அடங்கு கின்றன. அத்துடன் இவர் 9முறை ஆடட நாயகன் விருதுபெற்று தனது ஆளுமையை நிரூபித்திருக்கிறார்.

**கிறிஸ் கெய்ல் (மேற்கிந்திய தீவு)**

மேற்கிந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட் வீரரான இவர் 102ஒருநாள் போட்டிகளில் 9சதங்கள், 21அரைச் சதங்களுடன் 3,714 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அத்துடன் 88விக்கெற்றுக்களையும் வீழ்த்தி அணிககு பெரும் பலமாகத் திகழ்கிறார். அத்துடன் அணியின் இறுதிக்கட்ட ஓவர்களில் மிகச சிறப்பாகப் பந்து வீசக் கூடியவர் இவரே.

**ஜக்கலிஸ் (தென்னாபிரிக்கா)**

தெனனாபிரிக்க அணியின் தூண் என வர்ணிக்கப்படுகிறார். இவரை அதிரடி வீரர் எனக் கூறமுடியாது. இருந்தாலும் தேவைப்படும் நேரத்தில் தனது திறமையைக் காட்டி பந்தினை நாலா புறமும் விளாசிவிடுவார்.

விளையாட்டு





ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையே முதலாவது டெஸ்ற் கிரிக்கெற வரும் 18ல் துவங்குகிறது. இதற்காக சிட்னி மைதானத்தில் நியூசிலாந்து வீரர்களான நாதன் ஆஷ்லே, ஹாமிஸ் மார்ஷல் இருவரும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். (அடுத்த படம்) பயிற்சி இடைவெளியில் நியூசிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் ஸ்கொட் ஸ்டைரிஸ்(இடது), ஆஸி., வீரர் மைக்கேல் கிளாா்க்குடன் பேசிக் கொண்டிருக்கிறார்.

## நியாப்பின் உ ஆம் கட்டப் பணிகள் இவ்வருட இறுதியுடன் பூர்த்தி

யாழ். மாவட்டத்தில் நியாப்பின் இரண்டாம் கட்ட வேலைத் திட்டங்கள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் முதலாவது கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும்.


அதன் பின்னர் அவ் வேலைகள் தொடரப்படமாட்டாது. எனவே குளங்கள் உவர் நீர்த்தடுப்பு அணைகள் என்பனவற்றைப் புனரமைத்தல, பொதுமண்டம் அமைத்தல்,ஜீவனோபாயககடன் வழங்கல் ஆகிய திட்டங்களை செயற்படுத்தி வருகின்ற விவசாய சம்மேளனங்கள, கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும மாதர் அபிவிருத்திச்சங்கங்கள் அனைததும் தத்தமது வேலைத் திடடங்களைக் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செய்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட முகவர் திணைக்களங்களுக்கு நியாப்திட்ட முகாமைத்துவம் அறிவித்துள்ளது. (ரு-19)

## எம். பிக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் ஆரம்பிக்கப்படவிருந்த திட்டங்கள் நிராகரிப்பு

தமிழீழத் தேசியக் கூட்டமைப்பின பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் மேற்கொள்ளப்பட விருந்த திட்டங்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்படும் தலா 50 லட்சம் ரூபா நிதியில் யாழ். குடாநாட்டில் மேற் கொள்ளப்படவிருந்த வேலைத் திட்டங்களுக்கென ஒதுக்கிய நிதிகளே அரசாங்கத்தால் நிராகாிக்கப்பட்டுள்ளன.

கஜேந்திரகுமாரின் நிதியில் 21 இலட்சத்து 65ஆயிரம் ரூபாய், சிவனேசனின நிதியில் 25 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்,கஜேந்திரனின் நிதியில்34 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்,பத்மினி சிதம்பரநாதனின் நிதியில் 25 இலட்சதது 10 ஆயிரம் ரூபா,ரவிராஜின் நிதியில் 25 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய, மாவை சேனாதிராஜாவின் நிதியில 18 இலட்சம் ரூபாய்,சுரேஸ் பிரேமச்சந்திரனின் நிதியல் 27 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் களும் நிராகரிக்கப்பட்டுள்ளது அத்துடன் ஈழவேந்தன் சிவாஜிலிங்கம் ஆகியோரின் திட்ட முன்மொழிகளும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்படடுள்ளன. (க-121)



தீபாவளி தினத்தன்று யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் 15ஆயிரம் ரூபாவை வைப்புச் செய்த பெண்ணொருவருக்கு முகாமையாளர் தீப விளக்கொன்றைப் பரிசாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## கேட்கும் வரம் தரும் கேதார கௌரி விரதம்

**புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தினமன்று (23.10.2004) தொடங்கி அனுஷ்டிக்கும் இவ் விரதம் ஐப்பசிமாதம் தீபாவளி அமாவாசை தினமான இன்று நூல் எடுப்பதன் மூலம் நிறைவடைகிறது.**

இந்து மக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் விரதங்களில் கேதார கௌரி விரதமும் ஒன்றாகும். ஆதியில் உமாதேவியினால் அனுஷ்டிக்கப்பட்டு கௌதம முனிவரால் உலகுக்கு உணர்த்தப்பட்ட இவ் விரதத்தை ஆண, பெண் வேறுபாடின்றி அனுஷ்டித்துப் பயன் பெற்றோர் ஏராளம்.

உமாதேவியார் இவ் விரதத்தை அனுஷ்டித்து சிவவெருமானின் பாதி உடம்பில் ஐக்கியமானார். நாரத முனிவர் நயந்துநோற்று மாயையிலிருந்து விடுதலைபெற்றார்.

ஆசசுனன் பாசுபதாஸ்திரம் பெற கண்ணபர மாத்மாவின் உபதேசப்படி நோற்றபோது அரனினால் அணைக்கப்பட்டான்.

ஏழ்மையில் வாடிய புண்ணியவதி, பாக்கியவதி என்னும் இரு பெணகள் இதனை நோற்றதால் அரச போகம் அடையப் பெற்றனர்.

வேண்டுவோர் வேண்டுவதைத் தரவல்ல இந்த விரதத்தின் பெருமையும் மகிமையும் அளவிடறகரியன. 21 இழையால் அமைந்த பட்டு நூற்கயிற்றில் 21 முடிபோட்டு கும்பத்திலோ அல்லது லிங்கத்திலோ வைதது 21 தினங்கள் உரியமுறைப்படி பூஜிக்க வேணடும். பூஜித்து ஆணகள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிந்தால் நீண்ட ஆயுள், கல்வியில மேன்மை, மாங்கலயபாக்கியம், லக்சுமிகரம் திருவருள், குரு வருள், சம்சாரபலம், இல்லறசுகம், புத்திர சந்தான பாக்கியத்துடன் உத்தி யோக வியாபார விருத்தியும் பெற்று நீண்டகாலம் நலமுடன் வாழ்வர் என்பதில் ஐயமில்லை.

இததகைய மேன்மையும் அர்த்தமும் மிக்க இவ்விரதம் தோன்றிய வரலாறு பற்றி நோக்குவோம். முன்னோர் காலத்தில பிருங்கிரஷி என்ற முனிவர் வாழந்துவந்தார். அவர் அம்பாளை வழிபடாது சிவனை மட்டும வழிபட்டு வந்தார். இதைப் பாரதத பார்வதிதேவி சிவனைப்பார்த்து "இம் முனிவா் என்னை வழிபடாது உங்களை மட்டும் வழிபடும் காரணம் யாது?" எனக் கேட்டார். இவர் போகத்தை விரும்புவர் அல்ல. மோஷத்தை விரும பியபடியால் என்னை மட்டும் வழிபட்டு வருகிறார்" என்று சிவன் பதில் கூறினார். இதனால் கோபமுற்ற பார்வதி பிருங்கி முனிவரின் தசை முதலிய பாகத்தை எடுத்துக கொண்டார். நடக்க முடியாமல் இருந்த பிருங்கிாிஷிக்கு இறைவன் ஒரு பொல் லுக கொடுத்தார். அதன் துணை யுடன இறைவனை வழிபாடற்றிவந்தார். இதனால் அம்பிகை இறைவனின் ஒரு பாகத்தை தான் இடம்பெறவேண டும் என்று இந்த இருபத்தொரு நாளும விரதம் இருந்து கௌரி நோன்பை நோறறு இருபத்தொராவது நாள் இறைவனின் வாமபாகத்தைப் பெற்று அர்த்தநாரியாக ஆண்பாதி பெண் பாதி ஆகிய தினமே கௌரி விரதமாகும.

இதை அனுஷ்டிப்பவர்கள 21 நாளும் இரவு மட்டும் உணவு உண்டு 21வது நாள் உபவாசம் இருநது இரு பத்தொரு இழையைக்கொண்ட நூலில் 21 முடிச்சு இட்டு அதை கையிலே கட்டி விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும என்பது கௌரி விரத விதியாகும்.

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள**

## யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறிய 8 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற 25ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவு இன்னமும 8ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது எனினும், இதற்கான நிதியின்மை காரணமாகவே இக் கொடுப்பனவை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத் தொகையில சுமார் 6ஆயிரம் குடும்பங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தன எனவும், ஏனைய 2ஆயிரம் போ ஏணைய 14 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதுவரை மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 26ஆயிரம் குடும பங்களுக்கு 25ஆயிரம் ரூபா கொடுப்பனவாக 665 மில்லியன் ரூபா வழஙகப்பட்டுள்ளது. இதேவேளை, இக் கொடுப்பனவு தொடர்பாக மீளக் குடியமர்ந்துள்ள கும்பங்களின் தலைவர்களிடம் கொடுப்பனவுப் பத்திரங்களில் கையொப்பங்கள் பெறப்பட்டு விட்டபோதிலும்கூட கொடுப்பனவு வழங்கபபடவில்லை. என மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரதேச பிரிவு ரீதியாக தென்மராட்சியில் 11ஆயிரத்து 215 குடும்பங்களுக்கும, மருதங்கேணியில் ஆயிரத்து 699குடும்பங்களுக்கும் பருத்தித்துறையில் ஆயிரத்து 164குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாயில் ஆயிரத்து 986 குடும்பஙகளுக்கும் கோப்பாயில் ஆயிரத்து 940குடும்பங்களுககும், சங்கானையில் ஆயிரத்து 44குடும்பங்களுக்கும், வேலணையில் ஆயிரத்து 54குடும்பங்களுககும் காரைநகரில் 993குடும்பங்களுக்கும், உடுவிலில் 979குடும்பங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் 896குடும்பங்களுக்கும் நல்லூரில 838குடும்பங்களுக்கும் ஊர்காவற்றுறையில்732குடும்பங்களுக்கும், தெல்லிப பழையில் 853குடும்பங்களுக்கும் கரவெட்டியில்478குடும்பங்களுக்கும், நெடுந் தீவில் 38குடும்பங்களுக்கும், இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டதாக நிக்கொட் நிறுவனம் மூலம அறியப்படுகின்றது. (ரு-16)

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர் - குறள்

வலம்புரி

# நோர்வே அமைச்சரின் வரவு பார்த்தசாரதியின் தூதாகட்டும்

சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடனும் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஏற்கனவே நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பல தடவைகள் இரு தரப்புடனும் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

அதேபோல் ஜப்பான் நாட்டுத் தூதுவர் யசூசி அகாசியும் இலங்கைக்கு வந்து, சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் சாத்தியப்பாடுகள் இருக்கின்றனவா? என்பது பற்றி ஆராய்ந்துள்ளார்.

எனினும், எவருமே சாதகமான பதிலை தந்ததாகவோ அன்றி சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதாகவோ இல்லை.

இந் நிலையில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன் இரு தரப்புடனும் பேச்சுக்கள் நடத்துவதற்காக இலங்கை வந்துள்ளார். இவரின் வருகையில் இலங்கை மக்கள் சமாதானத்தில் ஓர் சாதகமான முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம், ஜப்பானியத் தூதுவர் அகாசி ஆகியோரிடம் எதிர்பார்க்காத விடயம் ஒன்றை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரிடம் இலங்கை மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானதொன்றே.

இந்த எதிர்பார்ப்பானது சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்ற செய்தியாக இருக்குமானால் மக்கள் உவகை அடைவர். எனினும் இங்கு, 'இரண்டில் ஒன்று' என்ற முடிபை நோர்வேயிடம் இருந்து அறிந்து கொள்வதிலேயே பொதுமக்கள் ஆவலாய் இருக்கின்றனர்.

சமாதானம் சமாதானம் என்று கூறியே, இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. அது மட்டுமன்றி நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்டிருந்த ஆறுசுற்றுப் பேச்சுக்களும் எந்த முடிபையும் தராமல் தறிக்கணித்துப்போய்விட் டது.

இவ்வாறான நிலைமையில் 'மிகவிரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என நம்புகிறோம்'

' இரு தரப்பும் சமாதானத்தில் பெரு விருப்புடன் இருக்கின்றனர்'

'சமாதானப் பேச்சுக்கு வருவது என்பது ஓர் நீண்டகால விடயம்'

'இருபது வருட யுத்தத்தை ஒருசில நாட்களுக்குள் முடிபுக்குள் கொண்டுவர முடியாது' போன்ற பதில்களை நோர்வேயிடம் இருந்து மக்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக சமாதானப் பேச்சு தொடருமா இல்லையா?, சமாதானப் பேச்சுக்களுக்கு தடையாக இருப்பது யார்?, போன்ற முடிபுகளை 'ஒருசொல்' விடையில் அறியவே மக்கள் விரும்புகின்றனர். சுற்றிவளைத்து தகவல்களைச் திரிபுபடுத்தி யாரது மனமும் நோகாமல் நடக்கும் 'நயக்கத்தக்க நாகரிகம்' நமக்கு வேண்டாம்.

நோர்வேயின் சாந்தம் மனிதத்தை மதிக்கும் பக்குவம், மற்றவர்களை நோகடிக்காமல் பேசும் பாங்கு இவை எல்லாம் பாராட்டுக்குரியவை.

ஆனால் இலங்கை நிலைமை வேறு. இங்கு நல்ல குணத்தை பலவீனமாகக் கருதும் பண்பாடே நீண்டு நிலைக்கிறது. இங்கு இருக்கின்ற எல்லோரையும் சமாளிக்கவும் எல்லோரிடமும் நல்ல பெயர் பெறவும் வேண்டுமென நோர்வே கருதுமானால் அது மூக்குடைந்து போகும் பரிதாப நிலைக்கு நோர்வேயை இட்டுச் செல்லும். எனவே தொடர்ந்தும் இருதரப்புடனும் பேச்சுக்கள் நடத்துவது காலம் கடத்தப்படுவது யாவும் தமிழ் மக்களையே பாதிக்கும் என்பதால் ஓர் திடமான முடிபை நோர்வே எடுக்கவேண்டும். அதனை எடுப்பதாக அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சரின் வருகை அமைய வேண்டும். அதாவது பாண்டவர்களுக் கும் கௌரவர்களுக்குமான விவகாரத்தில் கௌரவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக தூதுவர்கள் பலர் சென்றபோதிலும் இறுதியாக சென்ற பார்த்தசாரதியின் தூதாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸனின் தூது அமையவேண்டும்.

அதற்காக யுத்தமே முடிபு என்பது அல்ல. மாறாக தூது செல்வது முடிபடைய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# படையினர் பிடியில் உள்ள வீட்டை எண்ணி அதன் உரிமையாளருக்கு உடல்நிலை பாதிப்பு

## வீட்டை மீட்டுத்தருவதாக ரவிராஜ் எம்.பி. உறுதி

(யாழ்ப்பாணம்)

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள தனது வீட்டை பாதுகாப்புப் படையினர் இன்னமும் விடுவிக்காமையினால் மிகவும் துயரமடைந்த ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவர், உடல் பாதிப்பு உச்சகட்டத்தை அடைந்த நிலையில் யாழ்ப்பாணம்போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இது பற்றி மேலும் தெரியவருவதாவது, உசன் பகுதியிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்ற ஓய்வு பெற்ற ஆசிரியையான திருமதி முத்துப்பிள்ளை என்பவர் தனது வீட்டினை553ஆவது படையணி யினர் இன்னமும் விடுவிக்காமையினால் மிகுந்த உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தார் அதனைத் தொடர்ந்து இவரை இவரது உறவினர்கள் வைத்தியசாலை மேலதிக சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

எனது வீட்டை இராணுவம் இன்னமும் விடவில்லை. வாங்கித்தாருங்கள் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இவர் வைத்தியசாலையில் இருந்து வருகின்றார். எனினும் இவரது உடல நலத்தை மேம்படுத்தும் நோக்குடன் 'வீட்டை இராணுவம் விட்டு விட்டது என உறவினர்கள் அவருக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ் ஆசிரியையை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் நேற்று முன்தினம் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் இராணுவத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் வீட்டினை விடுவிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாக இவர் ஆசிரியையின் உறவினரிடம் உறுதி அளித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

(ப-16)

# மிதிவெடி அகற்றல் செயற்திட்டம் குறித்து கம்போடியாவில் 3நாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு கம்போடியாவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்வதற்கு இலங்கையில். இருந்து இரண்டுபேர் அங்கு செல்லவுள்ளனர். யுனிசெவ் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டுக் திட்ட உதவியாளர் எஸ். சிவநேசலிங்கம் மற்றும் யுனிசெவ் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட மிதிவெடி செயற்பாட் டுத் திட்ட உதவியாளர் பத்மசங்கர் ஆகிய இருவருமே இப் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்வுள்ளனர்.

இதேபோன்று மிதிவெடியினால் பாதிப்புள்ள அனைத்து நாடுகளிலும் இருந்தும் பிரதிநிதிகள் இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ளவுள்ளனர்.கம்போடியாவும் மிதிவெடியால் அதிகம் பாதிக்கப்பட்டிருந் தமையினாலேயே இப்பயிற்சிப்பட்டறை கம்போடியாவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்றையில் கலந்துகொள்பவர்களுக்கு கம்போடியாவில் மிதிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்கள் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் ,அங்கு புதைக்கப்பட்டு மீட்கப்பட்ட மிதிவெடிகள் [illegible]ன்றனவும் காண்பிக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ள[illegible]

இதேபோன்று இலங்கையில் இருந்து இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் இலங்கையில் மிதிவெடி புதைக்கப்பட்டிருக்கின்ற இடங்கள், புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளின் வகைகள்,மிதிவெடி அகற்றுதலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் இதுவரை காலமும் மீட்கப்பட்டுள்ள மிதிவெடிகள், மக்களிடம் மிதிவெடி அகற்றப்பட்டு கையளிக்கப்பட்ட பிரதேசங்கள் போன்ற விடயங்கள் பற்றியும் விளக்கமளிக்கவுள்ளனர்.

(ரு-19)

# ஆன்மாக்களால் தேடப்படும் கடவுள் எங்கே இருக்கிறார்!

கடவுள் என்று ஒருவர் உள்ளாரா? எங்கு உள்ளார்? அவரது வடிவம் எது? ஆணா, பெண்ணா? அல்லது அவர் உருவமற்றவரா? அவர் எனக்கு எப்படி தொடர்பானவர்? அவர் என்மேல் அக்கறை உடையவரா? இவை போன்ற அல்லது இவற்றிற்கு மேற்பட்ட பல கேள்விகள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மனிதனை அரித்துக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய கேள்விகளுக்கு பொருத்தமான பதில்களை கண்டறிந்த, கடவுளுடனும் தம் சொந்த உயர் ஆன்மத் தன்மையுடனும் தனக்குள்ள உறவை கண்டுபிடித்த ஒரு சிலரும் உள்ளனர்.

இத்தகைய மக்களே ஆண்டவனின் திட்டத்தில் தமக்குரிய இடத்தை உணர்ந்துகொண்டவர்கள்.

கடவுள் என்பவர் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அப்படி இருப்பவர் என்று ஸ்ரீ கல்கி அருள்மொழிகிறார்.

கடவுள் தன்மையை மிகச் சரியாக விளக்கும் இந்து மத பதங்களான, "பக்தப்பராதீனன்" அல்லது "யதோக்தகாரி" பக்தப்பராதீனன் என்பதற்கு பக்தர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவர் என்று பொருள். யதோர்த்தகாரி என்பதற்கு கேட்பதைக் கொடுப்பவர் என்று பொருள். தனக்கென்று கடவுளுக்கு சுயமான இயல்பு கிடையாது. கடவுள் எந்த வடிவில் உங்களுக்கு காட்சி தருகிறாரோ அந்த வடிவம் நீங்கள் கடவுளுடன் வைத்திருக்கும் உறவைப் பொறுத்தது. அவரவர் எண்ணப்படியே அவர்களுக்கு எல்லாம் அமையும் என்கிற விதியே இங்கு செயல்படுகிறது. கடவுள் ஒரு கற்பனையே என்று பெரும்பாலான மக்கள் எண்ணுகின்றனர். விஞ்ஞான அறிவியல் மனிதர் என்று கருதப்படுபவர்கூட நம் சொந்த நம்பிக்கையால் நிகழும் நிகழ்வே இம் மாபெரும் அற்புதம், அருட்செயல் என்று விளக்க முற்படுவர்.

நம்பிக்கை என்பது நிலவைப் பார்ப்பதற்கு பயன்படும் ஒரு தொலைநோக்கி போன்றது. நிலவே இல்லாதிருந்தால் நாம் எதைப் பார்த்திருக்கமுடியும். அதுபோலவே சமயப் பற்றோ, நம்பிக்கையோ கடவுளிடம் நீங்கள் அணுக உதவி செய்கிறது. கடவுளோ, அருளோ இல்லாதிருந்தால் நம்பிக்கையோ, சமயப் பற்றோ இருந்தென்ன இலாபம்?

கடந்த சில நூற்றாண்டுகளாக மனிதனுக்கு கடவுள் உள்ளார் என்பதைவிட அவர் ஒரு கற்பனையாகவே இருந்துவருகிறார். இதுவே மனிதனின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் துயரங்களுக்கும் மூல காரணமாகும். உதாரணமாக மின்சாரத்தை எடுத்துக் கொள்ளலாம். அது ஒளியாகவோ ஒலியாகவோ அல்லது உணர்வாகவோ மட்டுமே பார்க்கப்படுகிறது. அல்லது உணரப்படுகிறது.

இவ்வாறு மின்சாரம் இல்லாவிட்டால் அதனை கண்டுபிடிக்க முடியாது. அது போல கடவுள் அருவமாய் இருப்பதால் பார்க்கவோ உணரவோ அல்லது கேட்கவோ இயலாது. ஏனெனில் அவரோ எங்கும் நிறைந்திருக்கின்றார். ஆகவேதான் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுளை அவர் தம் அவதார வடிவிலே காண முடிந்தது. எனவே கடவுளும் அவதார புருஷரும் ஒன்றே. இவர்கள் தம்மிடத்தே கடவுளின் கூறுகளை கொண்டு விளங்குவார்.

அறிவியல் ஆனது வாழ்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் தந்துவிட்டது. ஆனால், வாழ்வதற்காக எதையுமே தராதுபோய்விட்டது. ஸ்ரீ கல்கியும் ஸ்ரீ அம்மாவும் முத்திக்கான அவதாரங்கள் நம்மை துயரத்தில் இருந்து விடுவிக்கவும் உண்மையை அனுபவிக்கச் செய்யவும் உதவுகின்றன. அவர்கள் சைதன்யத்தின் சக்தியாலும் மகத்துவத்தாலும் நம் வாழ்வை மாற்றியமைக்கிறார்கள். இதனால் மனிதன் கடவுளை நினைக்க அனுபவிக்க அற்புதங்கள் செய்யமுடியும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

**கல்கி பக்தன்**

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எது உயர்ந்தது? அழியக்கூடிய இந்த பொருடகளின் பின்னால் ஓடுவதா... மாறாத ஒன்றை வழிபடுவதா? எது செயல் முறைக்கு உகந்தது? பொருட்களை அடைவதற்காக வாழ்க்கையின் எல்லா சக்திகளையும் செலவழிப்பதும் அவற்றை அடையும் முன் மரணம வந்து விட அவற்றை எல்லாம் விட்டுப்போவதா அல்லது என்றும் மாறாததை வழிபடுவதா?

**சுவாமி விவேகானந்தர்**

## தேசிய கால்நடை அபிவிருத்தி முகாமையாளர் யாழ். விஜயம்

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் டாக்டர் சுமித் தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் உள்ள பண்ணைகளை நேரில் பார்வையிட்டு, பண்ணையாளர்களோடு இன்று காலை 10 மணிக்கு யாழ் செயலக மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ் மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட செயலக உயரதிகாரிகள் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். வரும் இக்குழுவில் தேசிய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கதிரவேற்பிள்ளை மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்கள் இருவர் அங்கம் வகிக்கின்றனர். (ச-19)

## அரபாத்தின்...

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு முழுமையான ஆதரவினை வழங்கி வருகிறது.

பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளனர். அரபாத்தின் இழப்பு பலஸ்தீன மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

அதற்காக நாம் மிகவும் வருந்துகிறோம். இக்கட்டான வேளையில் அவர் காலமாகியமையிட்டு நாம் ஆழ்ந்த அனுதாபம் கொள்கிறோம். ஆனாலும் பலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து நடைபெறவேண்டும். பலஸ்தீனிய மக்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறோம் எனவும் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (த-121)

## புதிதாக எந்தவொரு...

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் நேற்று முற்பகல் 11 மணியளவில் தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இப் பேச்சுக்களின்போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அன்ரன் பாலசிங்கமும், சு.ப.தமிழ்ச்செல்வனும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி சந்திரிகாவால் புதிதாக ஒரு செய்தி அனுப்பிவைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் புதிதாக எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. அவர் தன் பழைய நிலைப்பாட்டையே சொல்லியனுப்பியுள்ளார். எந்த இடைக்கால தீர்வுத்திட்டமும் ஒட்டுமொத்தமான நிரந்தரத் தீர்வின் ஒரு இணைபிரியாத அங்கமாக அமையப்பெறவேண்டும் என்ற கருத்தையே சந்திரிகா நோர்வேத் தரப்பினிடம் சொல்லி அனுப்பியுள்ளார்.

அது தொடர்பாக நீண்டநேரம் பேசப்பட்டது. இறுதியாக நாம் ஒரு செய்தியை சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ளோம். நோர்வே அனுசரணையாளர்கள் எம்மிடம் இதனை இப்போதைக்கு ஊடகவியலாளர்களிடம் வெளியிட வேண்டாமென கேட்டுள்ளனர். தாம் அதை சந்திரிகாவுடன் கதைத்து, அதன் முடிவை தெரிவித்த பின்னர் அதுபற்றி கருத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுள்ளனர். இதுவே நோர்வே குழுவினருடனான சந்திப்பில் இடம்பெற்ற முக்கிய விடயமென அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன, இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஏன் விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்தி வருகின்றனர் என்பது தொடர்பாகவும், இதனை நிரந்தரத் தீர்வுடன் இணைத்துப்பேச ஏன் விரும்பவில்லை என்ற விடயங்களும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நிரந்தரத் தீர்வுபற்றி 50 ஆண்டுகளாக பேசி வருகின்றோம். எத்தனையோ வடிவங்களில் பேசியுள்ளோம். சமஷ்டி பற்றி பேசுவதெல்லாம் புதிய விடயம் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பே இப்பிரச்சினை எடுக்கப்பட்டது.

பல்வேறு வடிவங்களில் தீர்வுத் திட்டங்கள் பேசி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அவை நிராகரிக்கப்பட்டு இப்போது இறுதியாக ஒன்றைத்தான் கேட்கின்றோம். எமது மக்களுக்கு அவசரமான மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இடைக்கால ஒழுங்கு ஒன்றைச் செய்து அதன் அடிப்படையிலும் வெளிநாடுகள் வாக்குறுதியளித்த நிதியுதவியைப் பெற்று அவசரமாக எமது மக்களுக்கு உருப்படியாக செய்யவேண்டும். அதற்காகத்தான் நாம் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை கேட்கின்றோம் எனவும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இடைக்காலத் தன்னாட்சி வரைபை அடிப்படையாகவைத்து பேச்சுக்களை அரசு ஆரம்பிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் வைத்து பேசவேண்டிய விடயங்களை ஊடகவியலாளர்கள் மூலம் அல்லது நிபுணர்கள் மூலம் அரசு தரப்பில் தெரிவித்துக் கொண்டிருக்கிறதே தவிர உருப்படியாக எதுவும் செய்யவில்லை. எமது வரைவு இறுதியான ஒன்றல்ல. இதை அடிப்படையாக வைத்து பேசவரவேண்டும் அதற்கு தயார் என்பதை அரசுக்கு சொல்லியனுப்பியுள்ளோம்.

ஆனால் அரசின் நிலைப்பாடு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற வரம்புக்குள் பேசாது, ஒரு நிரந்தரத் தீர்வுடன் இணைந்ததாக இந்தத்திட்டத்தை பற்றி பேசுவோம், நிரந்தரத்தீர்வு பற்றிப் பேசுவோம் என்பதையே சந்திரிகாவின் யோசனைகள் வலியுறுத்துகின்றன எனவும் அவர் கூறினார். (த)

## புலிகள்..

சிங்கவைூயும் நேற்றிரவு சந்தித்துப் பேசவிருந்தார். யசீர் அரபாத்தின் மறைவையிட்டு அவர் ஜனாதிபதியுடனான சந்திப்பை முடித்த கையுடன் நாட்டைவிட்டுப் புறப்பட்டார். பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும், எரிக்சோல் ஹெய்மும் கொழும்பில் தங்கியுள்ளனர். இவர்கள் இன்று கிளிநொச்சிக்கு வந்து ஜனாதிபதிக்கு புலிகளால் அனுப்பிய தகவல் குறித்து ஜனாதிபதியின் வெளிப்பாடு தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு எடுத்து விளக்குவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் தங்கியிருக்கும் நேரத்தில் அரசியல் தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்தவும் வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ச-121)

## யசீர் அரபாத்தின்...

தீனர்களின் விடுதலைக்காக போராடி வந்தார். இதனால் பலஸ்தீனியர்கள் மட்டும் அல்ல முழு உலகமுமே அவரின் இறப்பினால் கவலையடைந்துள்ளது.

இவரின் மரணச்சடங்கு இன்று எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவில் நடைபெறவுள்ளது. இதற்கு எகிப்திய அரசு தனது பூரண சம்மதத்தை தெரிவித்துள்ளது. அரபு லீக்கின் தலைமையில் மரணச்சடங்கு ஹெய்ரோவில் நடைபெறவுள்ளது. அரபாத்தின் பூதவுடல் மேற்குக்கரைப் பிரதேசத்தில் றமளா நகரில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அரபாத்தின் உடல் றமளாவில் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு இஸ்ரேல் அனுமதிக்கும் என இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யசீர் அரபாத்தின் உடல்நிலை குறித்து முரண்பாடான செய்திகள் அவர் இறக்கும்வரை தொடர்ந்து வெளியாகி வந்தன. அவரது மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டதாகவும் மூளையும் இருதயமும்; சுவாசப்பையும் இயங்கிக்கொண்டிருப்பதாகவும் பல்வேறு வகையான செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தன. இதேவேளை நேற்று முன்தினம் கூட அவர் செயற்கைச் சுவாசத்துடன் உயிர்வாழ்வதாகவே செய்திகள் வெளியாகின.

கடந்த சில தினங்களாக அரபாத்தின் உடல்நிலை மோசமடைந்து வந்ததையும், அவர் தொடர்ந்தும் கோமா நிலையில் இருப்பதையும் வைத்தியர்கள் தெரிவித்துவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் மறைவுக்கு ஜனாதிபதி, பிரதமர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன தேசத்தை கட்டியெழுப்பவும், பலஸ்தீன எழுச்சிக்கும் அவர் வகித்த பங்கு மிக முக்கியமானது அவரின் மறைவு பலஸ்தீன மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும் என ஜனாதிபதி தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகின் பலம் வாய்ந்தவர்களின் முன்னிலையில் சுதந்திர பலஸ்தீனத்தை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட மாபெரும் தலைவர் யசீர் அரபாத். அவரின் மறைவு பலஸ்தீன மக்களுக்கும், அவர்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் பேரிழப்பாகும் என்றார் பிரதமர்.

யசீர் அரபாத்தின் மறைவு முஸ்லிம் மக்களுக்கு பேரிழப்பாகும் என்று கூறினார் ரவூப் ஹக்கீம்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அரபாத்தின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்றிரவு எகிப்திற்குப் பயணமாகியுள்ளார். (த-08-121)

## தலைவர்...

விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சந்திப்புக்களின் பின்னர் தலைவர் வே.பிரபாகரனால் நோர்வேக் குழுவினருக்கு மதிய விருந்தளிக்கப்பட்டது. (ச-121)


## யமசம்கார உற்சவம்



நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலில் இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரும் வந்து தரிசித்து யமபயம் நீங்க சிவனை வில்வத்தால் அர்ச்சித்து பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக

பிரதமகுரு
பிரம்மஸ்ரீ - தாணு-வாசு தேவக் குருக்கள்
(வேத சிவாகம பண்ணிசைச்செல்வன்)
சுபம்

உபயகாரர்
(8996)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லூர் சட்டநாதர் பெருமான் திருக்கோயிலுக்கு யம சம்கார சிற்பங்களை அழகாகவும், துரிதகதியில் அமைத்துத் தந்த இந்திரகலாலய அதிபர் **ஸ்தபதி நா.மகேந்திரன்** அவர்கட்கு ஆலய பிரதம குரு தாணு - வாசுதேவக் குருக்கள் ஆசியோடு தேவஸ்தான நிர்வாகம், தர்மகர்த்தா ஆகியோர் அடியார்கள் முன் நிலையில்

**"சிவஸ்ரூபகல்பன்"**

எனும் சிறப்பு விருதினை வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்து மனம் மகிழ்ந்தனர்.
-சுபமஸ்து

(9002) உபயகாரர், தேவஸ்தானம்

## ராஜா, யாழ்ப்பாணம்

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான
அஜித் (இருவேடம்) பூஜா நடித்த



அட்டகாசம்
பு.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவுசெய்துகொள்ளலாம். (C/692)

11.00; 2.30, 6.30, 9.00 இற்கு
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
இந்தியன் புருஸ்லி தனுஷ், தியா நடித்த
ட்ரீம்ஸ்
யாழ்ப்பாணம் (நீல்ஸ்) (சி-675)

## பதவி வெற்றிடம்

### பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்).

தகுதியானவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம். 
நிர்வாக உத்தியோகத்தர்


## மரண அறிவித்தல்



## திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

உரிமையாளர் (ஜவ்னா றேடர்ஸ் -யாழ்ப்பாணம், யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம் -சாவகச்சேரி)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 10.11.2004 அன்று புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீறஜனி (அவுஸ்ரேலியா), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கௌரி (கனடா), சிவபாலன் (அவுஸ்ரேலியா), தயராஜினி, அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சரோஜினிதேவி (சுவிஷ்)ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற நாகேஷ், சரஸ்வதி, ஞானம்பாள், விஜயலஷ்மி காலஞ்சென்ற சிவநாமம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

நிருஜா, நிவேதா, பிரவீனன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன் அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**27/7 இந்துமகளிர் ஒழுங்கை**
**கந்தர்மடம்,**

தகவல்: **மனைவி, மக்கள்**
**021 222 3205**

(C/689)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.